ISSN : 2278-7550

2278-7550

பல்லவி பதிப்பகம்

# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550

பிப்ரவரி – 2020



visit us: www.pallavipathippakam.in |

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

மலர் : 8 பிப்ரவரி-2020 இதழ் : 2

**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549.

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya,Malaysia,*
skumaran.um@gmail.com

**Dr.S.Senthilkumar**
*Annamalai University, Annamalai nagar,*
dr.senthilkumarcdm@gmail.com

**Sellathurai Sutharsan**
*University of Peradeniya, sri Lanka,*
sellathuraisutharsan@gmail.com

**Dr.N.Sathya**
*Government  College For Women, Kumbakonam,*
drsathiyatamil@gmail.com

**Balasundaram Elayathamby**
*Annamalai Canada Campus, Canada,*
Balasudarame@yahoo.com

**Dr.S.Priya**
*Government Arts College, Chidambaram,*
rojacreatives@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனைக் குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்.*
gayathiripraba1981@gmail.com

**முனைவர் எஸ்.குமரன்**
*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா.*
skumaran.um@gmail.com

**முனைவர் ச.செந்தில் குமரர்**
*அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்*
dr.senthilkumarcdm@gmail.com

**செல்லத்துரை சுதர்சன்**
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.*
sellathuraisutharsan@gmail.com

**முனைவர் நா.சத்யா**
*அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்,*
drsathiyatamil@gmail.com

**பாலசுந்தரம் இளையதம்பி**
*அண்ணாமலை கனடா வளாகம், கனடா,*
Balasudarame@yahoo.com

**முனைவர் ச.பிரியா**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்,*
rojacreatives@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. சிவ வழிபாடும் முருக வழிபாடும்

***முனைவர் சி.வீரமணி** - 1

2. நடுவுநிலை பொருண்மை குறித்து இலக்கியங்களும், புலமை இலக்கணங்களும்

***சு.அமித்ரா** - 6

3. மதுரைக்கலம்பகத்தில் காணப்படும் புணர்ச்சி

***அனுஷா.ஹ** - 12

4. ஆற்றுப்படை இலக்கியங்களில் பாலைநில மக்களின் வாழ்வியல்

***முனைவர் சு.சீனிவாசன்** - 16

5. திருக்குறளில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் சு.சோமசுந்தரம்** - 20

6. தமிழிலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

***திருமதி.கு.செ.சரஸ்வதி** - 24

7. முத்தொள்ளாயிரம் காட்டும் வாழ்வியல்

***முனைவர் வா.பாக்யலெஷ்மி** - 28

8. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனை

***ஆ.சுரேஷ்** - 32

9. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***சு.ருக்குமணி** - 36

10. முல்லைப்பாட்டும் வாழ்வியல் சிறப்புகளும்

***மா.நஜ்மூன்** - 41

11. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***வி.கார்த்திகாயினி** - 45

# சிவ வழிபாடும் முருக வழிபாடும்

***முனைவர் சி.வீரமணி,** இணைப்பேராசிரியர், அகராதியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010.

இந்தியச் சமயங்களுள் சைவ சமயமும் ஒன்றாகும். இச்சமயம் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டது. ஆரியர் வருகைக்கு முற்பட்டதும், வேதங்களுக்கு மாறானதுமான ஒரு மூலத்தைக் கொண்டது, அ஼ ஃதாவது சிந்துவெளி அகழ்வாய்விலேயே சிவ வழிபாட்டின் கூறுகள் இருப்பதாக ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இதனை,

> **... தந்திரங்களின் குறியீடுகளும் சித்திரங்களும் பழங்கற்காலத்தைச் சார்ந்தவை. இவ்விலக்கியங்கள் தொல்லிந்தியக் குருமார்களால் வகைப்படுத்தப்பட்டு இருக்கலாம். தொல்லிந்தியர்கள் வழிபட்ட சிவனும் அவன் தேவியும் தந்திரங்களின் தெய்வங்கள், தந்திர இலக்கியங்கள் வேதங்களை விடவும் தொன்மை யானவை**[1]

எனும் அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ் கூற்றால் அறியலாம்.

வேதங்களுக்கு முற்பட்டதான இச்சிவவழிபாடு வாழையடி வாழையாகத் தமிழர்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இதனை,

> **தென்னாடுடைய சிவனே போற்றி**
> **எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**[2]

என மாணிக்கவாசகர் பாராட்டுவதால் அறியலாம்.

சிவன் எனும் சொல்லிற்குச் செம்பொருள் எனப் பொருள் கூறுவார் பாவாணர்.

> **சிவம் - சிவன்: சிவநெறியாரால் செந்நிறத்தான் எனக் கருதப்படும் இறைவன் அல்லது கடவுள். சிவன் - சிவை: சிவன் தேவியாக உருவகிக்கப்பட்ட திருவருள்**[3]

என விளக்கும் பாவாணர் இச்சொல்லின் பொருளையும், அப்பொருள் உணர்த்தும் பண்பாட்டு மரபையும் விரிவாக ஆராய்கின்றார். இவரின் ஆய்வுமுடிவு வருமாறு,

> **சிவம் என்னும் சொல்லிற்கு நன்மை என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி ஒரு பொருள் கூறியிருப்பது வடநூல் வழக்கைத் தழுவியதாகும். சிவன் தென்னவர் தெய்வமாதலால் அப்பொருள் பொருந்தாது. நல்ல அல்லது மங்கலம் என்னும் பொருளில், உருத்திரனுக்கும் இந்திரனுக்கும் அக்கினிக்கும் பொதுவாக வழங்கிய 'சிவ' என்னும் அடைமொழியாகிய வடசொல் வேறு: நெருப்பின் கூறாகக் கொள்ளப்பட்டு அழல் வண்ணன் எனப்பட்ட இறைவன் பெயராகிய சிவன் என்னும் தென்சொல் வேறு. சிவனியும், மாலியம் ஆகிய இரு தமிழ் மதங்களையும் ஆரியப்படுத்தற் பொருட்டு, ஆரியர் வகுத்த முத்திருமேனிக்கூட்டி, முத்தொழில் தலைவனாகிய சிவனுக்கு அமங்கலமான அழிப்புத் தொழிலே ஒதுக்கப்பட்டது பற்றி, சிவனியத் தமிழர்க்குள்ள மனத்தாங்கலைத் தீர்த்தற்கே, சிவன் என்னும் சொற்கு நன்மை செய்பவன்**

**என்று பொருள்கூறி, சிவனுக்குச் சங்கரன் (சம்+கர = சங்கர = நன்மை செய்வன்) என்றொரு பெயரையும் அமைத்தனர் என அறிக**[4] என்பதாகும்.

மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்குக் காரணமாக இருப்பது எனும் பொருளில் சிவன் எனும் பெயர் அமைத்திருப்பதாக பாவாணர் கருதுகின்றார். ஆயினும் இச்சிவழிபாடு குறித்து வரலாற்று அடிப்படையில் ஆராய்கின்ற மறைமலையடிகளார், சிவவழிபாடு சேயோனாகிய முருக வழிபாட்டிலிருந்து தொடங்கியிருக்க வேண்டும் என்று கருதிகின்றார்.

**இனி ஒளி வடிவை உற்று நோக்குவோமாயின், அது சிவந்த நிறம் அல்லது பொன்னிறம் உடையதாயம், அந்நிறத்தின் கண்ணே அடங்கிய ஒரு சிறு நீல நிறமும் உடன் கூடியதாயும் இருத்தலை அறிந்து கொள்ளலாம். தீயின்றன்மை கடுந்தன்னமையேயாகும்: தீயின் நிறமுஞ்சிவந்த நிறமேயாகும்: அத்தீயின்கண் அடங்கிய நீரின்றன்மையோ குளிர்ந்த தன்மையாகும்: அந்தீரின் நிறமோ நீலநிறமாகும். மேலும் வன்றன்மையுடைய தீ ஆண்டன்மையது என்றும், மென்றன்மையுடைய நீர் பெண்டன்மையது என்றும், பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும். ஆனதனாற்றான், வன்றன்மையுஞ் சிவந்த நிறமும் உடையவன் சிவபிரான் என்றும், மென்றன்மையும் நீலநிறமும் உடையவள் உமைப்பிராட்டியென்றுந் தமிழ் நூல்களெல்லாம் ஒத்து ஒருமுகமாய் உரைக்கின்றன. அவ்வுண்மைக்குச் "சிவனெனு நாமத் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" என்னும் அப்பர் திருமொழியும்,"நீலமேனி வாலிழை" என்னும் பழைய ஐங்குறுநூற்றுச் செய்யுட் சொற்றொடருமே உறுபெருஞ் சான்றாம் என்க. சிவன் என்னுஞ் சொல் முருகப்பிரான் பெயராகப் பண்டைத் தொல்காப்பிய நூலுள் ஓதப்பட்ட சேயோன் என்னுஞ் சொல்லின் திரிபேயாகும்**[5]

என்பது அவரின் கூற்றாகும்.

சிவவழிபாடு முருக வழிபாட்டிலிருந்து தொடங்குவது என்ற கருத்து மிகுந்த ஆராய்ச்சிக்குரியதாகும். முருகனைக் குறிக்கும் பல பெயர்களுள்,'கந்தன்' என்பதும் ஒன்றாகும். 'கந்தன் என்ற சொல் 'கந்து' எனும் சொல்லின் அடியாகப் பிறப்பதாகும். இச்சொல்லிற்கு கட்டுத்தறி, தூண் ஆகிய பொருள்கள் உண்டு. தொன்மைக்கால மக்கள் வாழ்க்கையில் வளமைவழிபாடு தலையாய இடத்தைப் பெற்றிருந்தது. நிலத்தைப் பெண்ணாக உருவகிக்கும் மரபும் அவ்வளமைவழிபாட்டின் அடிப்படையில் உருவானதாகும். பயிர்களின் வளர்ச்சிக்கும் - இனப்பெருக்கத்தின் தேவைக்கும் அடிப்படைகளாக நிலத்தையும், பெண்ணையும் கருதினர். அந்த வகையில்தான் பெண்ணின் பிறப்புறுப்பு வளமையின் குறியீடாகக் கருதப்பட்டது. அதே அடிப்படையில்தான் கந்தாகிய ஆண்குறி வழிபாடும் இடம் பெற்றது. ஆண்குறி வழிபாட்டின் தொன்மையையும் சிறப்பையும் க.நெடுஞ்செழியன்,

**ஆண்குறி வழிபாடு உலகந்தழுவிய ஒன்றாக இருந்தது. வாழ்வின் இயக்கத்திற்கு உந்து விசையாக அமைந்தது. இதன் தொடக்கம் மிகவும் கரடுமுரடாக இருந்திருக்கலாம். ஆனால் இது உண்மையானது: நேர்மையானது. எவ்விதமான ஆடம்பரமும் இதன் பெருமையைச் சிதைத்து விடாது**

என்று பட்டாச்சாரியார் கூற்றை மேற்கோள் காட்டி விளக்குவார். மேலும்,

**தொல் பழங்கால மனிதன் உயர்ந்து நிற்கும் தூண்களை, விட்டங்களை, திரண்டுள்ள பனை மரங்களை எல்லாம் ஆணின் பிறப்பு உறுப்பாக இயங்கு சக்தியாகக் கொண்டு வணங்கினான்**[6]

என்ற பெர்ட்ரண்டுரசல் கருத்தையும் எடுத்துக்காட்டி விளக்குவதும் எண்ணத்தகும்.

முருக வழிபாடு

தமிழர் வழிபாட்டில் முருகன் திருமணக் கடவுளாக வணங்கப்படுபவன். அதன் காரணமாகவே முருகனைச் ‘செவ்வேள்’ எனப் போற்றினர். இளமைப் பருவத்தில் இயல்பாகத் தோன்றும் காம உணர்வு மனிதர்களை நெறிபிறழச் செய்வது: நெறிப்பட்ட வாழ்க்கையை மீறத் தூண்டுவது. அதன் காரணமாகவே காம உணர்வின் குறியீடாக ‘காமனை உருவாக்கிய மக்கள் அவனைத்’ துன்பம் தருபவன் எனும் பொருளில் ‘கருவேள்’ என்றனர். காமன் உயிர்களை எப்படித் துன்புறுத்துவான் என்பதைச் சிலப்பதிகாரம் விவரிக்கின்றது. உலகில் வாழும் உயிர்கள் அனைத்தையும் தாம் மகிழும் துணையோடு சேர்த்து வைப்பவன் இனிய இளவேனிலாகிய இளவரசனாவான். அவன் இளவரசனாக இருப்பதால் நெறிபட ஒழுகான். அந்திப் பொழுதாகிய யானையின் பெரிய பிடரியிலே ஊர்ந்து வரும் திங்களாகிய செல்வனும் நேர்மையாளன் அல்லன். அதனால் புணர்ந்தோர் சிறிது நேரமே விலகியிருந்தாலும், பிரிந்து சென்றோர் தமது துணையை மறந்து வாராது ஒழியினும், மணமிக்க மலர்களால் ஆன அம்புகளால் நல்ல உயிர்களைக் கொல்லுதல் என்பது அவனுக்குப் புதுமையன்று எனும் பொருளில்,

**மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்**
**இன்னிள வேனில் இளவரசாளன்**
**அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய**
**திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்**
**புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்**
**தணந்த மாக்கள் தந்ததுணை மறப்பினும்**
**நறும்பூ வாளியின்நல்லுயிர் கோடல்**
**இறும்பூதன்று...**[7]

என விளக்கக் காணலாம். இத்தகு கொடியவனாகிய காமனின் துன்புறுத்தல்களில் இருந்து விடுவித்து, அவர்களை மண வாழ்க்கையில் ஈடுபடுத்தும் அருட்பண்பினனாக முருகன் திகழ்வதால்தான் முருகன் செவ்வேள் என்று வணங்கவும் போற்றவும் படுகிறான். இதனை,

**கயிலை நன்மலையிறை மகனை நின் மதிநுதல்**
**மயிலியல் மடவரல் மலையர்தம் மகளார்**
**செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்**
**அயல்மணம்ஒழியருள் அவர் மணம் எனவே**[8]

என்கிறது சிலப்பதிகாரம்.

“கயிலையாகிய நல்ல மலைக்குரிய இறைவனின் மகனே! அழகிய மதி போன்ற நுதலினையும், மயில் போன்ற சாயலினையும், இளமையையும், செயலை (பிண்டி) மலர்போலும் திருவடிகளையும் கொண்டவர்களாகிய நின் காதல் துணைவி வள்ளியையும் சேர்த்து வணங்குகிறோம், அயல் மணத்தை நீக்கி எம் காதல் துணைவனோடு எம்மைச் சேர்த்து வைப்பாயாக” என்பது அப்பாடலின் பொருளாகும். இதனால் முருகன் திருமணக் கடவுள் என்பது தெளிவாகும்.

திருமணக் கடவுளாகிய முருகன் கந்தனாகவும் வணங்கப்பட்ட நிலையில் தோன்றியதே இலிங்க வழிபாடாகும். பெண் தெய்வ வழிபாட்டில் தாய்மையின் அடையாளங்களான மார்பகம் கருப்பை, பெண்ணின் பிறப்புறுப்பு ஆகியன கடவுள் தன்மை பெற்றன. அவற்றைப்போலவே ஆண்மேலாண்மை பெற்ற குமுக அமைப்பில் இனப்பெருக்கத்தின் அடையாளமாகிய ஆண்குறி வழிபாடு தோற்றம் கொண்டது. இந்நிலையில்தான் முருகன் கந்தனாகவும் வணங்கப்பட்டிருக்க வேண்டும். இதனை,

> **முருகன் சிவனின் மகனாகக் கருதப்பட்டபோது கந்தம் சிவவழிபாட்டோடு - இலிங்க வழிபாட்டோடு இணைந்துவிட்டது. மேலும், சிவவழிபாட்டோடு தொடர்பு கொண்ட காளை, பாம்பு ஆகியனவும் தொடக்க நிலையில் பாலுறவின் குறியீடாகத் திகழ்ந்து, காலப்போக்கில் சிவனோடு தொடர்புடையனவாயின. இலிங்க வழிபாடு கந்து வழிபாட்டோடு கொண்ட தொடர்பினை, தமிழர்கள் வாழ்ந்த தீபகற்ப இந்தியாவில் உலகில் மற்ற இடங்களில் செழித்திருந்ததைப் போன்றே ஆண்குறி வழிபாடு வழிபாட்டோடு தொடர்பு கொண்டதாக மேலைநாட்டு ஆய்வாளர்களால் நம்பப்படும் இலிங்கவழிபாடு கி.பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னர் இருந்ததன் தடயங்களைக் காணமுடியவில்லை என்றாலும் சிவ வழிபாட்டின் செழுமையில் இனக்குழுக்களில் ஆண் குறி வழிபாடு கலந்து ஒரு இணக்க நிலையினை அடைந்திருக்க வேண்டும் என்பதைப் புறக்கணிக்க முடியவில்லை என்று விளக்குவார் பட்டாச்சாரியா. இக்கருத்தை அரண் செய்வதைப் போல அப்பர்(கந்து) நடுதறியினைச் சிவவழிபாடாகவே உருவகிக்கிறார்[9]**

எனும் விளக்கம் தெளிவுபடுத்தக் காணலாம்.

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து முருக வழிபாட்டில் இருந்து சிவவழிபாடு தோன்றியது எனும் மறைமலை அடிகளாரின் கருத்து உறுதியாகின்றது. இக்கருத்தைச் சிவன் என்ற சொல்லும் உறுதிப்படுத்துகிறது. ‘சிவ்’ என்ற வேர்ச்சொல்லிற்குப் பொருந்துதல் என்பது பொருளாகும். சிவன் உமையைத் தன் உடம்பில் ஒரு பாகமாக ஏற்றுக் கொண்டிருப்பதாலும், இலிங்கம் ஆவுடையோடு பொருந்தியிருப்பதாலும் சிவன் என்ற சொல் ‘பொருந்தி இருப்பவன்’ என்னும் பொருளில் ஏற்பட்டது என்பர். இதனை,

> **பொருத்தி இருந்தலின் காரணமாக இலிங்கம் சிவலிங்கம் என்றும், தன் உடலோடு உமையவளைப் பொருந்தி இருப்பதன் காரணமாகச் சிவன் என்றும் வழங்கும் தமிழ் வழக்குகளும் ஒப்பு நோக்கத்தக்கன. தொல்காப்பியத்துள்,**
>
> **ஓவும் உவ்வு ஏயொடு சிவணுதல்** என்றும்,
>
> **கள்ளொடு சிவணுதல் அவ்வியற் பெயரே**
> **கொள்வழி யுடைய பலவறி சொற்கே**
>
> **என்றும் வரும் நூற்பாக்களில் பொருந்துதல் என்ற பொருளில் வரும் சிவணுதல் என்ற சொல்லும் சிவ் என்ற அடிச்சொல்லின் வழியாகப் பிறந்தது ஆகும்[10]**

என விளக்குவார் க. நெடுஞ்செழியன்.

மேலே கூறியவற்றிலிருந்து பொருந்துதல் எனும் பொருள்தரும் சிவ் என்ற வேர்ச்சொல்லோடு அன் எனும் ஆண்பால் விகுதி சேர, சிவன் என்று ஆனது என்பது தெளிவாகும். சிந்துவெளி நாகரிகத்தின் பரவலாக இடம் பெற்றுள்ள இலிங்க வழிபாடு காலப்போக்கில் சிவன் வழிபாடாக முழுமை பெற்றது. முழுமை பெற்றதுடன் சிவன் முழுமுதற் கடவுளாகவும் போற்றப்படும் நிலை உருவாயிற்று.

**சங்க இலக்கியத்தில் சிவன்**

சிவவழிபாடு மிகவும் தொன்மையானது என ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சிவவழிபாட்டின் பல்வேறு கூறுகளும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன என்றும், சிவன் என்ற பெயர் சங்கஇலக்கியங்களில் இடம்பெறவில்லை என்றும் கூறுவர். இதனை,

**சங்க இலக்கியங்களில் சிவனுடைய உருவ அமைப்பு, பெயர்கள் மட்டுமே சுட்டப்பட்டுள்ளன. சங்கப் பாடல்களில் சிவபெருமானைப் பற்றிப் பின்வரும் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஆலமர் கடவுள், ஆலமர் செல்வன், நீலமணிமிடற்றன், முக்கட்செல்வன், முக்கண்ணான், முதுமுதல்வன் ஆகியவை சிறப்புடையன. மேலும், அப்பாடல்களில் சிவபெருமானின் உருவ அமைப்பு சுட்டப்பட்டுள்ளது. அவன் தாழ்ந்த நீண்ட சடையுடையவன், கொன்றை மாலையைச் சூடியவன், பிறைச் சந்திரனை அணிந்தவன், கங்கையைத் தாங்கியவன், வேதத்தை விளக்கியவன், மழுப்படைக் கொண்டவன், எட்டுக்கைகளை உடையவன், புலித்தோலைப் போர்த்தியவன், உமாதேவிக்குத் தன் உடலில் ஒரு பாதியைப் பகிர்ந்தளித்தவன், ஆனேற்றைக் (ரிஷபம்) கொடியாகவும், வாகனமாகவும் பெற்றவன் என்பன போன்ற பல செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவற்றுள் 'சிவன்' எனும் பெயர் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்[11]**

எனும் விளக்கத்தால் இவ்வுண்மையை அறிலாம்.

சங்க இலக்கியங்களில் சிவன் என்ற பெயர் காணப்படவில்லை என்றாலும் கூட, சிவனுக்குரிய அடையாளக் குறியீடுகள் பலவும் குறிக்கப்பட்டிருப்பதால் சிவ வழிபாடு தமிழகத்தில் பரவி இருந்திருக்க வேண்டும் என்பதை உய்த்துணரலாம். கி.மு. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டுகளைச் சார்ந்த இலிங்கங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளமை அக்கருத்தை உறுதி செய்கின்றன. சிவனைப் பற்றிய பல்வேறு பெயர்களுள் 'ஆலமர் செல்வன்' என்பதும் ஒன்றாகும். புறநானூற்றில் புலவர் பேரிச்சாத்தனார் ஆலமர்கடவுள் அன்னநின் செல்வம்[12]என சிவனைக் குறித்துள்ளார்.

இவ்வாறு சிந்துவெளிக் காலத்தில் அறியப்பட்ட சிவவழிபாடு படிப்படியாக வளர்ந்து, தமிழர்வாழ்வில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக இடம்பெற்றுள்ளதை மேற்காட்டிய சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்நிலையில்தான் சிவவழிபாடு ஓர் இயக்கமாக – பக்தி இயக்கமாக – ஒரு சமயச் சூறாவளியாக தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் வீசியதை நாயன்மார்களின் பாடல்கள் உணர்த்தக் காண்கிறோம்.

**துணைநூற்பட்டியல்**

1. அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ், மாக்கடல் மர்மங்கள், ப.107

2. ஜீ.ச. முரளி (ப.ஆ)., பன்னிரு திருமுறை, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம், போற்றித் திருஅகவல், வரி. 164-165.

3. ஞா. தேவநேயப் பாவாணா, சேர்ச்சொற் கட்டுரைகள். 2, ப.98

4. மே.கு.நூ., பக்.100-101.

5. மறைமலை அடிகள், தமிழர் மதம், ப. 145.

6. க. நெடுஞ்செழியன், தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம், ப.95

7. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ) சிலப்பதிகாரமூலம், 8: 56-63.

8. மே.கு.நூ.,24.பாட்டுமடை வரி.15.

# நடுவுநிலை பொருண்மை குறித்து இலக்கியங்களும், புலமை இலக்கணங்களும்

***சு.அமித்ரா,** முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 11307, தமிழியல் துறை, மனோண்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

முதற்கரு உரிப்பொருள் அடிப்படையில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையை விளக்கும் நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தமிழ் இலக்கியங்களும், 19-ம் நூற்றாண்டில் தண்டபாணி சுவாமிகளால் அறுவகை இலக்கணம் எனுமொரு நூலில் தனி இயலாக அமைக்கப்பெற்ற புலமை இலக்கணமும் நடுவுநிலைமை எனும் பொருண்மை குறித்து பதிவு செய்ததை ஆராய்ந்து விளக்குமுகமாகவே இவ்வாய்வுக் கட்டுரை அமையப் பெறுகிறது.

**நடுநிலை – பொருள்**

யாவரிடத்திலும் வேறுபாடு கருதாது ஒப்ப நிற்கும் தன்மையையே நடுநிலை என்பர். இந்நடுவுநிலையானது நடுநிலை, நெறிபிறழாமை, சார்பில்லாமை, ஒருபாற் கோடாமை, ஒருதலைச் சார்பின்மை எனப் பல பொருண்மைகளில் அழைக்கப்படுகிறது.

நன்னூல் இதனை “நிறைகோல்” (நன்.) எனவும், முத்துவீரியம் “துலாக்கோல்” (முத்து வீரியம் - பொதுப் பாயிரம்) எனவும் குறிப்பிட்டுச் செல்வதும் இங்கு எண்ணத்தக்கது.

**இலக்கியத்தில் நடுவுநிலை**

எவ்விடத்திலும் சாராது நிற்கும் தராசு போல, ஒவ்வொரு மனிதனும் நடுவுநிலையுடன் நிற்றல் சிறந்தது என்பதை உணர்த்தும் நோக்கத்தோடு இலக்கியங்கள் பலவும் இப்பொருண்மை குறித்தச் செய்திகளைப் பல பாடல்களின் வழி பதிவுசெய்துள்ளது. அந்தவகையில் முதலாவதாக,

அற இலக்கியங்களுள் ஒன்றான திருக்குறளில் இப்பதிவுகளைக் காணலாம். ஏனெனில் நடுவுநிலைமையின் சிறப்பை உணர்ந்ததன் பொருட்டு அக்காலத்திலே வள்ளுவர் அதற்கென தனியொரு அதிகாரம் வகுத்து அவற்றின்வழி நடுவுநிலை குறித்தான கருத்தாக்கங்களைக் கூற முற்பட்டுள்ளார்.

**“நெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்**

**நடுஒரீஇ அல்ல செயின்”** **(திருக்குறள்.116)**

**“சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்**

**கோடாமை சான்றோர்க்கு அணி”** **(திருக்குறள்.118)**

என்பனவற்றின் மூலம், ஒருவன் தன் நெஞ்சம் நடுவு நின்று முடிவெடுப்பதை விட்டுவிட்டு ஒருதலைச்சார்பாக முடிவெடுக்க நினைப்பானாயின் தனக்கு கேடு காலம் வரத் தொடங்கிவிட்டது என்பதை அறிந்து கொள்வானாக என்றும், ஒரு பக்கமாக சாயாமல் இருபக்கமும் சமமாக காட்டும் தராசைப்போல ஒருபக்கமும் சாராது நின்று நெறிபிறழாமல்

இருப்பதே சான்றோர்க்கு அழகென்றும் இங்கு கூறுவது நடுவுநிலைமையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருட்டே.

இவ்வாறு நெறிபிறழாமையைச் சான்றோர்க்கு அழகென வள்ளுவர் கூற, ஒருபடி மேற்சென்று முன்றுரையரையனார் நெறிபிறழாமையே எல்லாத் தவத்தைக் காட்டிலும் சிறந்த தவம் என்கிறார்.

**"தத்தமக்குக் கொண்ட குறியோ தவம் அல்ல,**

**செத்துக! சாந்து படுக்க! மனது ஒத்துச்**

**சமத்தனாய் நின்று ஒழுகும் சால்பு தவமே**

**நுகத்துப் பகல்ஆணி போன்று"** **(பழமொழி. பா.95)**

என்பதன்வழி, ஒருவர் தாம் சார்ந்த மதக்குறிகளை அணிந்திருப்பது மட்டும் தவமாகாது. வாளால் வெட்டிக் கொலைத்தொழில் செய்பவராக இருப்பினும் மேனியில் சந்தனம் பூசி மணப்பவராக இருப்பினும் நுகத்தடியின் நடுவில் பொருத்தப்பட்ட ஆணிபோல இப்பக்கமும், அப்பக்கமும் சாராமல் நடுவுநிலைமையும் சமச்சீர்மை வாய்ந்தவராய் ஒன்றித்த மனம் உடையவராய் பின்பற்றும் சான்றாண்மையே சரியான தவமாகுமென்று வலியுறுத்தியும் உள்ளார். இதனையடுத்து சிறுபஞ்சமூலப் பாடலானது,

**"பக்கம் படாமை"** **(சிறுபஞ்சமூலம். பா.75)**

ஒரு பக்கமாக சார்பு கொள்ளாமல் சமமாக இருத்தல், போன்றவை துறவிகளுக்கு இருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்று என்று கூறவதின் மூலம் நடுவுநிலையின் சிறப்பு குறித்து நாம் அறியலாம்.

தன் நிலையிலிருந்து மாறுபாடு கொள்ளாதிருத்தல் நலம் பயக்குமென்பதை,

**"ஓரம் சொல்லேல்"** **(ஆத்திச்சூடி.109)**

**"நிலையில் திரியேல்"** **(ஆத்திச்சூடி.68)**

மேற்கண்ட பாடல்வரிகள் சுட்டிச்செல்கின்றன. அவை, நடுவுநிலைமை பிறழ்ந்து ஒருபக்கம் சார்ந்து கருத்து உரைக்காதே என்றும், உன்னுடைய உயர்ந்த நிலையில் இருந்து ஒருபோதும் விட்டு விலகிவிடாதே உறுதியாக இரு என்று கண்டிப்புடன் கூறுவதாகவும் அமையப் பெற்றுள்ளது.

மேலும்,

**"தூக்கி, வினை செய்"** **(ஆத்திச்சூடி.60)**

என்பதின் வழி நல்லது, கெட்டது ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து செயல்படு என்ற கருத்தை முன்வைக்கிறார் ஔவை. இதனைத் தொடர்ந்து, ஏலாதி பாடலொன்றும் நெறிபிறழாமை குறித்தக் கருத்துக்களைக் கூறிச்செல்கிறது.

பேரவா, பகை, சினம், ஒருதலைப்பட்சம், கருமித்தனம், போலிமானம் என்ற ஆறும் மானிட உயிர்க்கு ஊனம் தருவதாக அறிஞர்பெருமக்கள் கூறிச்சென்றுள்ளதாகவும் அவற்றுள் ஒருதலைப்பட்சமான நடுநிலையின்மையையும் கூறியது நெறிபிறழாமையின் முக்கியத்துவத்தை உணர்ந்ததன் பொருட்டே.

**"ஆர்வமே செற்றம், கதமே, அறையுங்கால்**

**ஓர்வமே, செய்யும் உலோபமே, சீர்சாலா**

மானமே, மாய உயிர்க்கு ஊனம் என்னுமே

ஊனமே தீர்ந்தவர் ஓத்து" (ஏலாதி.பா. 61)

நடுவரின் செயல்பாடுகள் அமைய வேண்டிய நிலைக் குறித்து,

"இணைத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்

சீறின் சிறுகும் திரு" (திருக்குறள். 568)

"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்து செய்வஃதே முறை" (திருக்குறள். 541)

எனும் குறள்களின் வழி கூறமுற்பட்டுள்ளனர், விருப்பு வெறுப்பின்றி நல்லது ஒன்றையே நோக்கிக் கருத்துரைக்கும் அறிஞர்களுடனும் அமைச்சர்களுடனும் நன்கு ஆராய்ந்த பிறகே குற்றவாளிக்கு உரிய தீர்ப்பை வழங்குதல் வேண்டும் அவ்வாறு செய்யாமல் கோபத்தையும், தாபத்தையும் கொண்டு தீர்ப்பு வழங்கினால் தீர்ப்பு வழங்கியதின் பெருமை சிறுகும் என்பதோடு மட்டுமல்லாது.தன்கீழ்வாழ்வார், ஏதேனும் குற்றம் செய்துவிட்டால் குற்றத்தின் தன்மையை ஒருபக்கம் சாராது நடுவுநிலையுடன் ஆராய்ந்து உரிய தண்டனையைத் தவறாது வழங்குதலே முறையாகுமெனவும் கூறி நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டிய முறைமை குறித்துக் கூறிச்சென்றுள்ளார்.

திருக்குறளைத் தொடர்ந்து, நான்மணிக்கடிகையும், கோடிப்பொருள் கிடைப்பதாக இருந்தாலும் உள்ளமறிய நடுவுநிலைமை பிறழாது இருத்தல் வேண்டுமென்கிறது. அவற்றை கீழ்வரும் பாடல் பதிவு செய்கிறது.

"…………………. நெஞ்சு அறியக்

கோடாமை, கோடி பொருள் பெறினும்" (நான்மணிக்கடிகை.பா.25)

**காப்பியத்தில் நடுவுநிலை**

இலக்கியங்கள் நடுவுநிலைமை பிறழ்தலாகாது எனக்கூற காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் ஒருபடி மேற்சென்று நடுவுநிலை பிறழ்ந்தால் நேரும் தீங்கு குறித்து பாண்டிய மன்னனின் வாயிலாக விளக்கமுற்பட்டுள்ளது. அதாவது,

சிலம்பில் மாணிக்கப்பரலைக் கண்ட மன்னன் பதறி நான் முறையான குடையை உடையவனில்லை தாழ்ந்த குடையன், என் செங்கோல் நேரானது இல்லை தளர்ந்த செங்கோலன், பொற்கொல்லனின் சொல்லைக் கேட்ட நானோ இந்நாட்டு அரசனில்லை நானே கள்வன், மனித குலத்தைக் காக்கும் தென்னாட்டு காவல் என்னால் பிழையாயிற்றே என் ஆயுள் அழிக என்ற நிலையில் மன்னன் மயங்கி வீழ்ந்து இறந்தான். தென்னவனின் அரசமா தேவியாகிய கோப்பெருந்தேவியும் உள்ளங்குலைந்து கணவனை இழந்தவர்க்கு புகலிடமாக ஒன்றுமில்லை என்றெண்ணிய தன் கணவன் திருவடிகளைத் தொழுது அக்கணமே வீழ்ந்து இறந்தாள்.

"……………………… மணிகண்டு

தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்

பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட

யானோ அரசன்? யானோ கள்வன்

மன்பதை காக்கும் தென்புலம் காவல்

என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள் என

**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன்**

**கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கிக்**

**கணவனை இழந்தோர்க் காட்டுவது இல்என்று**

**இணைஅடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி"**

**(சிலம்பு. வழக்குரைகாதை. பா.வரி.72-81)**

நடுவுநிலைமை பிறழ்ந்ததால் ஏற்பட்ட எதிர்விளைவுகளை இக்காப்பியத்தின் பாடல் வரிகளில் இளங்கோவடிகள் பதிவு செய்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

**புலமை இலக்கணத்தில் நடுநிலை**

வள்ளுவரை அடியொற்றி சுவாமிகள் தமது அறுவகை இலக்கண நூலிலுள்ள புலமை இலக்கணம் எனும் இயலில் நடுநிலையின் சிறப்பை உணர்ந்ததன் விளைவாகவே நடுநிலை எனும் ஒரு தனிப்பிரிவை உருவாக்கி அவற்றுள் நடுநிலை குறித்தான கருத்தாக்கங்களை பதிவு செய்துள்ளதோடு புலவனின் செயல்பாடானது அமைய வேண்டிய நிலைகளுள் ஒன்றாகவும் இந்நடுநிலையை கூறிச் சென்றுள்ளார். மேலும், தவிர்க்க முடியாத காரணங் களால் புலவர் இருவர்க்கிடையே போட்டி ஏற்படுமானால் அப்போட்டிக்கு நடுவராக இருப்பவர் நடந்து கொள்ள வேண்டிய ஒழுகலாறுகள், போட்டியாளன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுகலாறுகள், குறித்த சில கருத்துகளையும் இப்பிரிவில் இடம்பெறச் செய்துள்ளார்.

**"நடுநிலை அனைத்தும் நாமகள் போலும்**

**கவிஞர்தம் உள்ளத்தில் கவின்தரும் அன்றே" (அறு.இலபுலமை.நூ.123)**

ஒருபாற்கோடாமையாகிய நடுநிலையின் மாண்புகள் யாவும் முற்றிலுமாக கலைமகளுக்கு இணையான உண்மைப் புலவர்களின் மனத்தினுள்ளே தாமே தோன்றி நிலைபெற்று நிற்குமென்பதன் வழி போலிப் புலவர்களால் நடுநிலையின் சிறப்பை உணர இயலாது எனும் கருத்தைக் கூறிச் செல்கிறார்.

மேலும்,

எந்த ஒரு நல்ல பொருளிடத்தும் சில தீயப்பண்புகளும், எத்தகைய தீய பொருளிடத்தும் சில நல்ல குணங்களும் கலந்திருக்கும் என்ற உண்மையை நடுநிலையுடன் உள்ளதை உள்ளபடி உணர்வோர் ஒருசில அறிஞர்களே என்ற தத்துவார்ந்த உண்மையையும் வெளிப்படுத்த முயன்றுள்ளார். அவற்றை இச்சூத்திரம் நன்கு விளக்குவதாக அமைகிறது.

**"நன்றிடை தீதும் நீதிடை நன்மையும்**

**ஒன்றுமாறு உணர்வோன் ஒவ்வோர் புலவனே". (அறு.இல.புலமை.நூ.115)**

நடுநிலையுடன் செயல்படுதல் வேண்டுமென்று கூறிச்சென்ற சுவாமிகள், அவ்வாறு நடுநிலையுடன் செயல்படாத பட்சத்தில் நேரும் தீங்கு குறித்தும் கூறியுள்ளார். அதாவது காப்பியத்தை அடியொற்றி,

**"பாட அறியார் படிப்பின் களிப்பால்**

**நாடவர் புகழ்வது நண்ணிப் பொருங்கால்**

**இடைவதும் புலவோன் இடியேறு என்ன**

**நக்குமிக்கு இகழ்வது நலம்ஆம் அன்றே" (அறு.இல.புலமை.நூ.119)**

கவிதை புனையும் ஆற்றலில்லாத இருவர் தாம் பழைய செய்யுட்களை நிறைய மனப்பாடம் செய்து வைத்திருக்கும் கருவத்தால் நாட்டிலுள்ள மக்களிடம் பாராட்டுப்

பெறவேண்டும் என்னும் காரணங்கருதி வாதிடப்புகுந்தால் படைப்பாற்றல் மிக்க நடுவர் அவ்விருவரையும் பரிகசித்து ஏளனம் செய்தலே சரியான முறையாகுமென்கிறார்.

ஏனெனில் படைப்பாற்றல் இல்லாதவர்க்கு வாதம் தேவையற்றது எனும் கருத்து இந்நூலாசிரியரின் எண்ணமாக இங்கு வெளிப்பட்டுள்ளது.

ஒரு பாற்கோடாமையாகிய உண்மையான நடுநிலையில் நில்லாது இழிகுணம் மிக்க புலவர்கள் தீர்ப்பு வழங்குபவராக அமைந்துள்ள ஒரு மன்றத்தில் இனிய மாம்பழம் போன்று சிறந்து விளங்கும் நற்றமிழ் கல்வியை அளவால் மிகச் சிறியதும், சுவையால் கசந்ததுமாகிய சுண்டைக்காயைப் போன்ற புல்லறிவாளர்கள் வென்றதாகப் பெயர் பெற்று விட முடியுமென்கிறார். அவற்றை உறுதி செய்யும் விதமாகவே கீழ்வரும் சூத்திரத்தை அமைத்துள்ளார்.

**"தேமாங் கனி உறழ் செழுந்தமிழ் புலமையைச்**

**சுண்டைக் காய்நிகர் சுவையுடைப் புலமையும்**

**வெல்லும்; நடுநிலை விளக்கம் காணாப்**

**புல்லிய புலவோர் பொருந்துஅவை யிடத்தே"** (அறு.இல.புலமை.நூ.122)

வாதமிடுகின்ற இருபுலவர்களின் சொற்போருக்கு நடுவராக அமைந்த ஒருவன் இருதரப்பு வாதங்களையும் நடுநிலையில் நின்று சீர்தூக்கி வன்மை மென்மைகளை உணர்ந்து நியாயமான தீர்ப்பை வழங்காமல் தன் சொந்த விருப்பு, வெறுப்புகளின் காரணமாக ஒருவனுக்குச் சாதகமாக சார்ந்து நின்றால் அவன் சூரியனும் சந்திரனும் நிலைபெற்று நிற்கும் நாள் வரையில் மீளாநரகத்து உழல்வான் என நடுவுநிலைமையின் அவசியத்தைக் குறித்ததோடு நடுவர் பின்பற்ற வேண்டிய முறையாகவும் இவற்றை இங்கு கூறியுள்ளார்.

**"இகலிய புலவோர் இடைநிலைக் காரன்**

**வஞ்சகம் பேசின் மதியமும் இரவியும்**

**உள்ள காறும் நிரயத்து - உழலுமே"** (அறு.இல.புலமை.நூ.118)

**போட்டியாளர்களின் செயல்பாடுகள்**

நடுவர் மட்டுமல்லாது சக போட்டியாளனும் நடுநிலை தவறாது விளங்குதலின் அவசியத்தை, ஒரு புலவன் மற்றொரு புலவனோடு வாதம் புரியுங்கால், வாதத்தில் தோற்ற பிறகும் தன் கொள்கை சரியானது என நிலைநாட்ட முடியாத நிலையிலும் போலித்தன்மானம் கருதி வீண்வாதம் செய்யாமல் தன் தோல்வியைப் பெருந்தன்மையோடு ஒப்புக் கொள்வதே அறிவுடைமை எனும் கருத்தை முன் வைத்து ஒரு போட்டியாளன் சக போட்டியாளனிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைமை குறித்தும் கூறியுள்ளார்.

**"தன் வழக்கு எதிர்த்தோன் தன்னாற் சிதையினும்**

**ஆம்எனப் பகர்வான் அறிவுடைப் புலவனே"** (அறு.இல.புலமை.நூ.117)

போட்டியில் தோற்றப் போட்டியாளன் இழக்க வேண்டியனவாக சிலவற்றைக் கூறிச் செல்கிறார். அவை,

வண்ணப்போட்டி - காது அறுபடல்

வெண்பா போட்டி - சிறப்புப்பட்டங்கள், பல்லக்கு, விருதுகள் இழத்தல்.

யாப்பு போட்டி - வென்றவன் தோற்றவனை அடித்தல் என்பன.

**நிறைவாக**

இவ்வாறு, இலக்கியமும், புலமை இலக்கணமும் எந்த எந்த வழிகளிளெல்லாம் நடுநிலை தவறாத அறத்தைப் புகுத்த முடியுமோ அந்த அளவிற்கு புகுத்திக் கூறியுள்ளது எதனாலெனில் மற்றவர்களுக்கு எந்த நிலையிலும் எந்தக் காரணத்தாலும் நடுநிலை யின்மையால் தீமை நிகழ்ந்து விடக் கூடாது எனும் காரணம் பற்றியே.

**பார்வை நூல்கள்**


1) அறுவகை இலக்கணம் ப.வெ.நாகராசன். 1991 - தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகம்.
2) அற இலக்கிய களஞ்சியம் க.ப.அறவாணன். 2008 - தமிழ்க்கோட்டம், சென்னை.
3) நீதி நூல்கள் பா.வளர்மதி. 1986 - சரவணாபதிப்பகம், தேவகோட்டை

# மதுரைக்கலம்பகத்தில் காணப்படும் புணர்ச்சி

***அனுஷா.ஹு,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழத்துறை, கேரள பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம், திருவனந்தபுரம்.

**முன்னுரை**

பலவகை வண்ணமும் வடிவமும் வாசமும் நிறைந்த மலர்களைக் கலந்து தொடுக்கப்பட்ட பூமாலையை கதம்பம் என்பர். அது போல பல வகை உறுப்புகளும், பலவகைப் பொருளும், பலவகை செய்யுளாலும் கலந்து பாடப்பெறும் சிற்றிலக்கியம் கலம்பகம் எனப்பட்டது. கலம்பகம் பெரும்பாண்மை அகத்திணைச் செய்திகளையும் சிறுபாண்மை புறத்திணைச் செய்திகளையும் அவற்றின் துறைகளையும் பெற்றுத் திகழும். கலம்பகங்கள் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு முதல் தோன்றலாயின. காலத்தால் முற்பட்ட கலம்பகம் நந்திக் கலம்பகம். கலம் + பகம் = கலம்பகம். கலம் என்றால் பன்னிரண்டு பகம் என்றால் அதில் பாதி ஆறு ஆக கலம்பக உறுப்புகள் பதினெட்டு. அவை புயவகுப்பு மதங்கள், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குற்றம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்பனவாகும். மதுரையில் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள சொக்கநாதப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற நூற்றி இரண்டு பாடல்களின் தொகுப்பே மதுரை கலம்பகம் இதன் ஆசிரியர் குமர குருபரர்.

**இலக்கணம்**

மொழியைச் செம்மையாகப் பேசவும் எழுதவும் துணைபுரிவது இலக்கணமாகும். இலக்கணம் மொழியின் அமைப்பையும், அழகையும் வெளிப்படுத்துகிறது. எள்ளிலிருந்து எண்ணையானது எடுக்கப்படுவது போன்று இலக்கியங்களிலிருந்து எடுக்கப்படுவது இலக்கணம். மொழியின் அழகான அமைப்பை பேணிக்காப்பதே இலக்கணம்.

**புணர்ச்சி**

எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று புணர்வது புணர்ச்சி எனப்படும். நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் இணைவது புணர்ச்சி. தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் ஆறு இயல்களிலும், நன்னூல் எழுத்ததிகாரத்தில் மூன்று இயல்களிலும் புணர்ச்சி விதிகளைக் கூறியுள்ளனர். இலக்கணங்கள் புணர்ச்சியினை வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழி புணர்ச்சி என இரண்டாக வகைப்படுத்துவர். இதனை தொல்காப்பியர் இ, ஈ, ஐ என்னும் மூன்றின் முன்னர் உயிர் வந்து புணரும் இடத்தில் யகரம் உடம்படு மெய்யாக வரும்.

(எ.கா) பதாகை + உடன் = பதாகையுடன்

**நிலைமொழி ஈறு உ கெடுதல்**

நிலைமொழி ஈற்றில் உகரம் வரும் இடத்தில் புணர்ச்சியில் உகரம் கெடும்.

‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’ என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்றில் உள்ள உகரம் கெட்டு பின் உடல் மேல் உயிர்வந்து ஒன்றியது என்ற விதிப்படி வருமொழி முதல் எழுத்து நிலைமொழியோடு புணர்ந்து வந்துள்ளது.

(எ.கா)

| | | | | |
|---|---|---|---|---|
| வீற்று | + | இருந்த | = | வீற்றிருந்த |
| தாளாது | + | என்று | = | தாளாதென்று |
| குறித்து | + | இங்கு | = | குறித்திங்கு |
| எவர்க்கு | + | என்று | = | எவர்க்கென்று |
| சிறந்து | + | அன்று | = | சிறந்தன்று |

**ஒத்த ஒற்று மிகுதல்**

உயிரீற்று நிலை மொழி முன் வருமொழியில் மெய் வருமிடத்து ஒத்த ஒற்று மிகுந்துள்ளன.

(எ.கா)

| | | | | |
|---|---|---|---|---|
| கடை | + | பலி | = | கடைப்பலி |
| முழவு | + | தோள் | = | முழவுத்தோள் |

**சுட்டைசார்ந்து ஒத்த ஒற்று மிகுதல்**

உயிரீற்று நிலைமொழி முன் வருமொழி ந,ப,வ,க,ச என்னும் மெய் வரும் இடத்தில் ஒத்த சுட்டெழுத்து மிகுந்து வந்துள்ளன.

(எ.கா)

| | | | | |
|---|---|---|---|---|
| அ | + | பிச்சன் | = | அப்பிச்சன் |
| இ | + | வண்ணம் | = | இவ்வண்ணம் |
| இ | + | ஊரில் | = | இவ்வூரில் |
| இ | + | பெருவளம் | = | இப்பெருவளம் |

**பண்புப் பெயர் புணர்ச்சி**

**“ஈறுபோதல் இடை உகரம் இய்யாதல்**
**ஆதி நீட்டல் அடி அகரம் ஐயாதல்**
**தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்**
**இனம்மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே”**

**(நன்.136)**

என்பது நூற்பா. இதன்படி,

| | | | | |
|---|---|---|---|---|
| கருமை | + | சினை | = | கருஞ்சினை |
| பசுமை | + | பொன் | = | பசும்பொன் |
| செம்மை | + | பொருள் | = | செம்பொருள் |

| | | | | |
|---|---|---|---|---|
| இளமை | + | பிறை | = | இளம்பிறை |
| வெண்மை | + | பொன் | = | வெண்பொன் |
| பசுமை | + | புண் | = | பசும்புண் |
| கருமை | + | கலை | = | கருங்கலை |
| வெண்மை | + | நிலவு | = | வெண்நிலவு |
| செம்மை | + | கால் | = | செங்கால் |
| கருமை | + | துணி | = | கருந்துணி |
| வெண்மை | + | பிட்டு | = | வெண்பிட்டு |
| பசுமை | + | தமிழ் | = | பசுந்தமிழ் |
| கருமை | + | கண் | = | கருங்கண் |

இவ்வாறு பண்புப்பெயர் புணர்ச்சியானது வந்துள்ளன.

**திசைப் பெயரோடு பிற பெயர்களின் புணர்ச்சி**

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய நான்கும் திசைப்பெயர்கள் ஆகும். இங்கு திசைப்பெயரோடு பிறப்பெயர்களின் புணர்ச்சியில் நிலைமொழியான வடக்கு என்ற சொல்லில் இறுதி எழுத்துக்களான க் கு வும் தெற்கு என்பதில் ற், கு வும் நீங்கி புணர்ந்துள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.கா) | வடக்கு | + | கலை | = | வடகலை |
| | தெற்கு | + | கலை | = | தென்கலை |

**இயல்பு புணர்ச்சி**

நிலைமொழியின் ஈன்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் எத்தகைய வேறுபாடும் இல்லாமல் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.கா) | பொன் | + | மலர் | = | பொன்மலர் |
| | சுழல் | + | விழி | = | சுழல்விழி |
| | வேள் | + | கணை | = | வேள்கணை |
| | வரி | + | வளைகள் | = | வரிவளைகள் |
| | எறி | + | வேல் | = | எறிவேல் |
| | சிறு | + | நூல் | = | சிறுநூல் |
| | தமிழ் | + | மதுரை | = | தமிழ்மதுரை |
| | பொன் | + | கூடல் | = | பொன்கூடல் |

**மெய்யீற்றுப் புணர்ச்சி**

“உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே”

(நன்.204)

நிலை மொழியீற்றில் மெய்யெழுத்து நிற்க வருமொழி முதலில் உயிர்வந்தால் அவை இயைந்து புணரும்.

(எ.கா)

| | | | | |
|---|---|---|---|---|
| புல் | + | கொடி | = | புட்கொடி |
| கரும் | + | கலை | = | கருங்கலை |

**முடிவுரை**

மதுரைக் கலம்பகத்தில் சொற்களின் புணர்ச்சி அடிப்படையில் நிலைமொழி ஈறு உ கெடுதல், ஒத்த ஒற்று மிகுதல், சுட்டைச் சார்ந்து ஒத்த ஒற்று மிகுதல், பண்புபெயர் புணர்ச்சி, திசைப்பெயரோடு பிற பெயர்களின் புணர்ச்சி, இயல்பு புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி ஆகிய புணர்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

# ஆற்றுப்படை இலக்கியங்களில் பாலைநில மக்களின் வாழ்வியல்

*முனைவர் சு.சீனிவாசன், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி – 02.

**முன்னுரை**

சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவ்விலக்கியங்கள் பண்டைத்தமிழரின் வாழ்வியல் செய்திகளையும் வரலாற்றையும் எடுத்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. பண்டைத்தமிழரின் வாழ்வியல் என்பது விருந்தோம்பல், பழக்கவழக்கங்கள், தொழில்கள், பொழுதுபோக்கு, விளையாட்டு, எனப் பல நிலைகளில் அமைந்துள்ளது. இவ்வகையில் சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களில் பாலைநில மக்களின் வாழ்வியல் அமைந்துள்ள முறையை ஆராய்வனவாக இக்கட்டுரை அமைகிறது.

**வாழ்வியல் - வரையறை**

வாழ்வியல் என்பது இவ்வாறுதான் வாழவேண்டும் என்று மனிதன் தனக்குள்ளாகவே வகுத்துக்கொண்ட முறை அல்லது கட்டமைப்பு. வாழ்வியல் குறித்துத் தமிழ் அகராதி “வாழ்வு என்னும் சொல்லிற்கு ‘நல்வாழ்க்கை’ என்றும் ‘இயல்’ என்னும் சொல்லிற்கு ‘இலக்கணம்’” என்று விளக்கம் தருகிறது.

இவ்வகையில் ஆற்றுப்படை பாலைநில மக்களின் வாழ்வியலை பின்வருமாறு பகுத்துக்கொள்ளலாம்.

1. குடில்
2. வேட்டைத்தொழில்
3. விருந்தோம்பல்

**1. எயினர் குடில்கள்**

பாலைநில மக்கள் தங்களைத் தட்பவெட்ப நிலையிலிருந்தும் விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ள குடில்களை அமைத்து வாழ்ந்துள்ளனர். இவ்வகையில் ஆற்றுப்படைநூல்களில் பேசப்படும் பாலை நில மக்கள் எவ்வாறு குடில்களை அமைத்து வாழ்ந்துள்ளனர் என்பதை பெரும்பாணாற்றுப்படை, காட்டுவழி முடிந்தவுடன் பாலைநில வழியில் அணிலும் எலியும் நுழைய முடியாதபடி ஈந்தின் ஓலையால் வேயப்பட்டு முட்பன்றியின் முதுகுபோலத் தோன்றும் குடிலில் வாழ்ந்துள்ளனர் (பெரும்பாண். 83-88) என்று கூறுகிறது. இதனை,

**“ நீள்அரை இலவத்து அலங்கு சினைபயந்த**
**பூளைஅம் பசுங்காய் புடை விரிந்தன்ன**
**வரிப்புற அணிலொடு, கருப்பை ஆடாது**
**யாற்றுஅறல் புரையும் வெரிநுடைக், கொழுமடல்**

வேல்தலை அன்ன வைந்நுதி, நெடுந்தகர்

ஈத்துஇலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை" (பெரும்பாண். 83-88)

இவ்வடிகள் எடுத்துரைக்கிறது. ஈந்தின் ஓலையால் குடில் செய்து வாழ்ந்த செய்தியைக் காண முடிகிறது.

மேலும் பாலைநிலத்துக்கு வெளியே வாழக்கூடிய எயினர் அரண் ஊகம்புல்லால் வேயப்பட்டது. அங்குள்ள அகன்ற வீடுகள் முள்வேலியும், நாயின் காவலும், தாழிட்ட கதவுகளும் உடையவை. வீடுகளில் வில், வேல், வாள், கேடயம், அம்புக்கட்டுகள், பாலைப்பாறை இவை இடம் பெற்றிருக்கும். என்பதை,

"ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்

வரைத்தேன் புரையும் கவைக்கடைப் புதையொடு

…….. ……… ……… …….

…………. …………. ……..

கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்" (பெரும்.122-129)

இவ்வடிகள் எடுத்துரைக்கின்றது.

சிறுபாணாற்றுப்படையில் சிறுபாணன் வேலூர் அடையும் போது அங்கு எயினர் குடில் பேசப்படுகிறது. உள்ளுறைவோர் வருந்துதற்குக் காரணமான வெப்பமிக்க குடிலின்கண் உறையும் எயினர் என்று பாலைநிலத் தன்மை பேசப்படுகிறது. இதனை,

"உருவெயிற் குலைஇய உருப்புவீர் குரம்பை" (சிறுபாண். 174)

இவ்வடி உணர்த்துகிறது. வெப்பமிக்க குடிலிலும் பாலைநில மக்கள் வெம்மையைப் பொருட்படுத்தாது வாழ்ந்துள்ள நிலையைக் காண முடிகிறது.

**ஒப்புமை**

இவ்விரு ஆற்றுப்படையை நோக்கும் போது பெரும்பாணாற்றுப்படையில் இருவகைக் குடில்கள் பயன்பாட்டில் இருந்துள்ளது.

1. பாலைநிலத்தில் வாழக்கூடிய மக்களது குடில் ஈந்தின் ஓலையால் வேயப்பட்டது என்றும் பாலைநிலத்திற்கு வெளியில் வாழக்கூடிய மக்களது குடில் ஊகம்புல்லால் வேயப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்விரு குடில்களுமே கூர்மை வாய்ந்த தாவரவகைகளால் வேயப்பட்டுள்ளது. ஊகம்புல்லின் குச்சிகளைத் துடைப்பமாகவும் பயன்படுத்துவர். புறநானூற்று 324 ஆம் பாடலில் வேட்டுவக்குலச் சிறுவர் இதன் குச்சியை எடுத்து அதன் முனையில் உடை எனப்படும் மரதத்தில் உண்டாகும் துளையுள்ள முள்ளைச் செருகி அம்புபோலச் செய்து வில்லில் ஏற்றி எலி முதலியவற்றை எய்வர் என்று ஆலத்தூர்கிழார் பாடியுள்ளார்.

இக்கருத்துக்களை நோக்கும் போது அறிவுக்கூர்மையோடு குடில்கள் அமைத்து வாழ்ந்துள்ள வாழ்வியலைக் காண முடிகிறது.

சிறுபாணாற்றுப்படையில் வெப்பமிக்க குடிலில் வாழந்துள்ளனர் என்று பேசப்பட்டுள்ளது.

**2. வேட்டையாடல்**

பாலை நில மக்கள் தங்கள் தொழில்களுல் ஒன்றாக வேட்டையாடுதல் முறையையும் பின்பற்றியுள்ளனர். இதனை உருத்திரங்கண்ணனார், பாலை நிலத்தில் நீரின்மையால், அலையும் மான்களின் அடிச்சுவடுள்ள இடங்களில், மழை வறண்ட காலத்தில் நீர்

தேடுவதற்குக் தோண்டிய குழிகள் உண்டு. அவற்றையடுத்த பள்ளங்களில் கானவர் பதுங்கியிருந்து நீர் குடிக்க வரும் பன்றிகளை வேட்டையாடுவர். பகற்பொழுதில் வலை மாட்டி முயல்களை வேட்டையாடுவர் (பெரும்பாண். 106-117) என்பதை பெரும்பாணாற்றுப்படையில் எடுத்துரைக்கிறார்.

இச்செய்தி வழி பாலைநிலக் கானவர் அறிவுக்கூர்மையோடு விலங்குகளை வேட்டையாடும் வாழ்வியல் முறையைக் காண முடிகிறது. இரவில் பன்றியையும், பகலில் முயலையும் நாய்களைக் கொண்டு வேட்டையாடும் மரபைப் பின்பற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**3. விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது பண்டைய நில மக்களின் வாழ்வியலில் ஓர் அங்கமாக இருந்து வருகிறது. பெரும்பாணன் இளந்திரையன் என்னும் மன்னனிடம் பரிசில் பெறச் செல்லும் போது, பாலை நில மக்கள் வறுமையோடு துன்பத்தில் வாழ்ந்த நிலையிலும் தன்னை நாடி வந்த பாணர்கள் தாம் இளந்திரையன் பாணர் சாதி என்று கூறியவுடன் உணவு கொடுத்து விருந்தோம்பிய செய்தி பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது.

மான்தோல் படுக்கையிலே தனது பிள்ளையோடு முடங்கியிருக்கும் பிள்ளையை ஈன்றவளைத் தவிர, பிற எயின மகளிர் பூண்கட்டிய சீரிய கோல் செருகப்பட்ட உளிபோலும் வாயையுடைய பாரைகளாலே கரம்பை நிலத்தைக் கிளறி எறும்பு சேர்த்து வைத்த புல்லரிசியை எடுத்து வருவர். பார்வைமான் கட்டி நிற்கும் விளாமர நிழலின் முற்றத்திலே தோண்டப்பட்டுள்ள நில உரலில் இட்டு வயிர உலக்கையினாலே குத்துவர். ஆழ்ந்த கிணற்றின் நீரைப் பழைய விளிம்பு உடைந்த பானையிலே ஊற்றி உலைவார்த்து முரிந்த அடுப்பிலே கள்ளினையும், சோற்றினையும் சமைப்பர். தேக்கிலையில் அவ்வுணவுகளைக் குவித்து தெய்வத்திற்குப் பலியிடுவது போல இரவலர்க்குக் தருவர் **(பெரும்.89-105)** என்று விளக்கப்படுகிறது. இக்கருத்தில் யாம் இளந்திரையன் பாணர் சாதி என்று பாணர் கூறியவுடன் அவர்களுக்கு சோறு இட்டது மன்னன் மேல் வைத்துள்ள நற்பண்பினையும் மன்னன் மக்களுக்கு நல் ஆட்சி கொடுத்த தன்மையும் புலப்படுகிறது. மேலும் உடைந்த பானையில் ஆழமான கிணற்றில் நீர் எடுத்து சமைத்து வறுமையிலும் தன்னை நாடி வந்த பாணர்களுக்குக் கொடுத்த அந்த இன்பமான வாழ்வியல் முறையைக் காண முடிகிறது.

பாலைநிலத்துக்கு வெளியில் வாழக்கூடிய எயின மகளிர் களர்நிலத்தே வளர்ந்த ஈந்திலை விதைபோலே நெல்லின் அவிழாகிய சோற்றையும், நாய் கடித்துக்கொண்டு வந்த அக்குமணி போன்ற முட்டையினையுடைய உடும்பின் பொரியலையும் தருவர் என்று கூறப்பட்டுள்ளது. இதனை,

**"களர்வளை ஈந்தின் காழ் கண்டன்ன**

**சுவல் விளை நெல்லின் செவ்அவிழ்ச்சொன்றி**

**ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பின்**

**வறைகால்யாத்தது வயின்தொறும் பெறுகுவீர்"** (பெரும்.130-133)

மேலும் சிறுபாணாற்றுப்படையில் சிறுபாணன் எதிரப்பட்ட பாணனுக்கு வழிக்கூறும் போது வேலூரை நீவிர் அடைவீராயின் அங்கு உமக்கு எயின குலப்பெண் சமைத்த புளியங்கறியிட்ட சோற்றினை, தேமாவின் தளிர்போலும் மகளிருடைய திரளுடனே ஆமானினது சூட்டிறைச்சியோடே நும் பசி தணியுமாறு நிரம்பப் பெறுவீர் என்று பாலைநில எயின குலப்பெண்கள் விருந்தோம்பிய செய்தியினை எடுத்துரைக்கிறான். இதனை,

“எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு

தேமா மேனச் சில்வளை யாயமொடு

ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்” (சிறுபாண். 175-77)

என்ற அடிகள் உணர்த்துகின்றது. இதன் மூலம் சிறுபாணர்களுக்கு பாலை நில எயின மகளிர் உணவு கொடுத்து விருந்தோம்பும் வாழ்வியல் முறையையும் காணமுடிகிறது.

**விருந்தோம்பல் ஒப்புமை**

பெரும்பாணாற்றுப்படை பாலை நிலத்தில், இருவகை விருந்தோம்பல் பேசப்படுகிறது.

1. பாலைநிலத்தில் வாழும் மக்கள், கரம்பை நிலத்தில் ஈட்டியால் குத்தி எடுத்த புல்லரிசியால் சமைத்த சோற்றினையும் கள்ளினையும் பாணர்களுக்குக் கொடுத்துள்ளனர்.

2. பாலைநிலத்திற்கு வெளியில் வாழும் எயினர்மக்கள் நெல்சோறும் உடும்பின் பொரியலும் கொடுத்துள்ளனர்.

சிறுபாணாற்றுப்படையில் புளியங்கறியிட்ட சோற்றினையும் ஆமானின் இறைச்சியையும் கொடுத்துள்ளனர்.

இவ்வகையில் மேற்குறித்த கருத்தின் படி இருவகை ஆற்றுப்படையிலும் புலால் உணவு உண்ணும் பழக்கம் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது

**முடிவுகள்**

- செம்பாதி ஆற்றுப்படை நூல்களில் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை என்ற இரண்டு ஆற்றுப்படை நூல்கள் மட்டும் பாலை நிலத்தையும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியலைப் பற்றியும் பேசுகின்றது. குறிப்பாக பெரும்பாணாற்றுப்படை மட்டுமே விரிவாகப் பேசுகின்றது.
- சிறுபாணாற்றுப்படை பாலை நிலத்தை தனியாகப் பேசவில்லை. குறிஞ்சியும் முல்லையும் திரிந்த நிலத்தில் எயினர் வாழும் முறையை மிகக் குறைந்த அளவிலே பேசுகிறது.
- பிற ஆற்றுப்படை நூல்கள் பாலைநிலத்தைப் பேசவில்லை. திருமுருகாற்றுப்படை சமயம் சார்ந்தது. அங்கு குறிஞ்சி நிலம் மட்டுமே வருணிக்கப்படுகிறது. பொருநராற்றுப்படையில் வழி வருணனை இல்லை. பாலை நிலத்தில் பொருநர்கள் நடந்து வரும் குறிப்பு மட்டுமே காணப்படுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானில வளமும் மக்கள் வாழிவியலும் பேசப்படுகிறது.
- கூத்தராற்றுப்படையில் மலைஅடிவார வளம், மலை உச்சி, மலையிலிருந்து இறங்கி வரும் போது முல்லை, மருதம் என்ற அமைப்பிலே வழிக் கூறப்படுவதால் அங்கும் பாலை நில வழி இல்லை.

பாலைநில மக்கள் தன்னை நாடி வருபவர்களுக்கு விருந்து கொடுக்கும் சுயநலமில்லாப் பண்பினையும், தன்னைப் விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள அறிவுக்கூர்மையோடு குடில் அமைத்து வாழ்ந்த நிலையினையும் விலங்குகளை வேட்டையாடும் தொழிலை மேற்கொள்வதையும் தங்கள் வாழ்வியலில் அமைத்துக்கொண்டு வாழ்ந்த வாழ்வியல் முறையை ஆற்றுப்படை நூல் வழி அறிய முடிகின்றது.

# திருக்குறளில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் சு.சோமசுந்தரம்,** முஹம்மது சதக் தஸ்தகீர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, இராமநாதபுரம்.

**முன்னுரை**

திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல இருபத்தோரம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழிகாட்டும் புரட்சி நூல். சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும் தமிழருக்கும் கிடைத்த அரிய களஞ்சியமான திருக்குறளில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. தமிழனுக்கு மட்டுமின்றி உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் புகழ்ந்துரைத்தார். இந்தக் கட்டுரை திருக்குறளில் உள்ள வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்வதாக அமைந்துள்ளது.

**இறையருளும் இன்பமுடன் வாழ்தலும்**

முழுமுதற் பொருளாகிய இறைவனின் தூய பாதங்களை வணங்காதவர்கள் எவ்வளவு தான் கற்றாலும் அதனால பயன் ஒன்றும் இல்லை என்ற வாழ்வியல் சிந்தனையை பின்வரும் குறட்பா எடுத்துரைக்கிறது.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** (குறள்:2)

மலரின் மேல் வாழ்கின்ற இறைவனின் திருவடிகளை நினைப்பவர்கள் இவ்வுலகில் நீடூழி வாழ்வார்கள் என்ற உயர்ந்த சித்தாந்தத்தை,

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தர்**
**நிலமிசை நீடுவாழ் வார்.** (குறள்:3)

என்ற வள்ளுவம் உணர்த்துவதை அறியலாம்.

இறைவனின் உண்மையான புகழைப் புரிந்து போற்றுபவர்களைத் துன்பத்தைத் தரும் தீவினையும் நல்வினையும் ஒருபோதும் தொடராது என்பதனை,

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.** (குறள்:5)

என்ற குறள் வழி உணரலாம்.

**அன்பைப் பேணுதல்**

அன்பைப் பேண வேண்டும் என்பது திருவள்ளுவரின் சீரிய சிந்தனையாகும். அதற்காக அன்புடைமை என்ற அதிகாரத்தை உருவாக்கினார்.

இதனையே, அனைவரிடமும் அன்போடு வாழும் இவ்வுலகில் இன்பமாய் வாழத் தெரிந்தவர்களின் சிறப்பு ஆகும் என்று வள்ளுவனார் கூறுகிறார்.

**அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**

**இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.** (குறள்:75)

இவ்வுலகில் அன்பிலாதவர்கள் , எல்லாம் என்னுடையது என்பர். ஆனால், அன்புடையவர் தங்கள் உடலையும் பிறருடையது என்பர் என்பதைப் பின்வரும் குறள் கூறுகிறது.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

**என்பும் உரியர் பிறர்க்கு.** (குறள்:72)

மேலும் மனதின் உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடலில் உள்ள உறுப்புகளால் எந்த பயனும் இல்லை என்பதை,

**புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**

**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.** (குறள்:79)

என்று குறள் வழி உணரலாம்.

**வாய்மையோடு வாழ்தல்**

வாய்மை இன்று மறைந்த போன ஒன்றாகக் காணப்படுகிறது. வாய்மை மனிதனுக்குத் தேவையான பண்பாக இருந்தாலும் கூட இது பல சமயங்களில் பின்பற்றப்படுவதில்லை. வாய்மையின் தன்மையைத் திருவள்ளுவர்

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**

**தீமை இலாத சொலல்.** (குறள்:291)

என்று கூறுகிறார்.

ஒருவன் தன் மனமறிந்து பொய் சொல்லாமல் வாழ்ந்தால், உலகில் உள்ளவர்களின் மனதில் அவன் நிலைத்து இருப்பான் என்பதை

**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**

**உள்ளத்து ளெல்லாம் உளன்.** (குறள்:294)

என்ற குறட்பா உணர்த்துகிறது.

வெளி இருளை நீக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. உயர்ந்தவர்களுக்கு பொய் பேசாமை என்னும் மன இருளை நீக்கும் விளக்கே சிறந்த விளக்கு ஆகும் என்று சான்றோரின் சிறப்பினை,

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**

**பொய்யா விளக்கே விளக்கு.** (குறள்:299)

என்ற குறட்பா பறைசாற்றுகிறது.

எனவே வாய்மையை மனித வாழ்வினில் கடைப்பிடித்தால் அது பலவிதமான நன்மையை உண்டாக்க வல்லதாகும்.

**ஒழுக்கத்தின் உயர்வு**

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**

**இழிந்த பிறப்பாய் விடும்.** (குறள்:133)

சமுதாயம் ஒழுக்கத்தின் வழி நடைபயின்று பிறப்பிற்குப் பெருமை வந்து எய்துமாறு வாழ்ந்திடல் வேண்டும் என்பதுடன் அவ்வொழுக்கமே உடைமையாகும் என்று கூறுவதிலிருந்தும் ஒழுக்கத்தினின்று பிறழ்ந்தால் பிறப்பே இழிவாகும் என்று உறுதிபடக்

கூறுவதிலிருந்தும் வள்ளுவம் ஒழுக்கமுள்ள சமுதாயத்தையே பெரிதும் விரும்பியது என்பதை அறியலாம்.

இதுமட்டுமின்றி ஒருவர் ஒழுத்தினால் மேன்மையை அடைவர், ஒழுக்கமின்மையால் பெறக் கூடாத பழியை அடைவர் என்று

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**

**எய்துவர் எய்தாப் பழி.** (குறள்:137)

குறள் கூறுவதை அறியலாம்.

மேலும் ஒழுக்கத்தின் உயர்வினை வலியுறுத்தும் பாங்கில், உலக மக்களோடு சேர்ந்து வாழத் தெரியாதவர்கள் பல நூல்களைக் கற்றும் அறிவு இல்லாதவர்க்கு ஒப்பாவார்கள் என்று உரைக்கின்றார்.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலா தார்.** (குறள்:140)

**புகழ் பெற வாழ்தல்**

நிலையாக எதனையும் தன்னகத்தே கொண்டு இயங்காத உலகத்தில் புகழ் ஒன்றே நிலைத்து நிற்கும் பேராற்றலையுடையது என்பதை உணர்ந்து

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**

**பொன்றாது நிற்பதொன்று இல்.** (குறள்:233)

என்று வள்ளுவர் விளக்குவதை அறிய முடிகிறது.

அதோடு, இந்த உலகில் நிலைத்து நிற்கும் புகழைப பெற்றால், வானுலகமும் தேவர்களைப் போற்றாமல் அவரையே போற்றும் என்று புகழின் பெருமையை

**நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**

**போற்றாது புத்தேள் உலகு.** (குறள்:234)

என்ற குறள் வழி அறியலாம்.

எந்த துறையில் ஒருவர் செயலாற்றினாலும் அதில் அவர் புகழ் அடைய வேண்டும். அவ்வாறு இயலவில்லை என்றால் அத்துறையில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது

**தோன்றின் புகழொடு தோன்றுக அ∴திலார்**

**தோன்றலின் தோன்றாமை நன்று.** (குறள்:236)

என்று புகழேரடுவாழ்தல் பற்றி வரையறை தருகிறது திருக்குறள்.

**வள்ளுவ இல்லறம்**

குடும்பத்தலைவன் என்பவன் பெற்றோர், மனைவி, மக்கள் மூவருக்கும் நல்வழியில் துணை புரிபவனே சிறந்த இல்லறத்தான் ஆவான் என்று இல்வாழ்க்கைக்கு உரிய குறளாக

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை.** (குறள்:41)

அமைந்திருப்பதைக் காணலாம்.

மேலும் தன் குடும்பம் மட்டுமின்றி துறவிகள் ஏழைகள் ஆதரவற்றவர்கள் ஆகியோருக்குத் துணையாய் இருப்பவனே சிறந்த இல்லறத்தான் ஆவான். இதனை,

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**

**இல்வாழ்வான் என்பான் துணை. (குறள்:42)**

என்று இல்வாழ்வின் சிறப்பினை மிகுத்துக் கூறுகிறது வள்ளுவம்.

இந்த உலகில் அறவழியில் முறையோடு வாழ்பவன் விண்ணுலகில் தெய்வங்களுக்கு நிகராகப் போற்றப்பட வேண்டியவன் ஆவான் என்று வள்ளுவன்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும். (குறள்:50)**

என்ற குறள் வழி இல்வாழ்வின் மேன்மையைச் சுட்டிக்காட்டுகிறார்.

**முடிவுரை**

**மக்களுக்கு மாநிலத்தில் வாழ்ககை வழிகளெல்லாம்**

**சிக்கலறக் காட்டிநலம் செய்நூலாம் - மிக்கபுகழ்ச்**

**செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே**

**சிந்தனை செய்வாய் தினம்.**

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் கூற்றுக்கு இணங்க திருக்குறளில் வாழ்வியல் சிந்தனைகள் என்ற இந்த ஆய்வுக் கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**மேற்பார்வை நூல்**

திருக்குறள் மூலமும் உரையும் - உரையாசிரியர் கீர்த்தி – அருணா பதிப்பகம்.

# தமிழிலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

***திருமதி.கு.செ.சரஸ்வதி,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம் - 631 501.

**முன்னுரை**

காதலும் அன்பும் சங்க காலத் தமிழர்களுக்கு உயிரும் உடலுமாக இருந்திருக்கின்றன. போரும் வீரமும் மட்டும் தமிழர் வாழ்வில் இடம் பெறவில்லை, ஈரமும் ஈகையும் நிறைந்ததாக அமைந்திருந்தது. மேலும் அரசு, அரசு முறை, வீரம், போர் திறம், காதல், அறம், கொடைச் சிறப்பு, இல்லற மாண்பு, மகளிர் நிலை, செல்வ வளம், வாணிபம், பண்டமாற்று முறை என்று வாழ்க்கையின் பல கூறுகளைக் கொண்டு விளங்கியவை தமிழிலக்கியங்களாகும். அவ்வகையில் தமிழிலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பண்பாட்டுக் கூறுகள்**

உலக நடைமுறையினையும் சமுதாயம் ஒத்துக்கொண்ட நெறிகளையும் பொருந்தி நடத்தலே **'பண்பாடு'** ஆகும். சமுதாயம் ஏற்றுக்கொண்ட நெறியோடு பண்பாட்டுச் சிந்தனைகளையும் நல்கி சமுதாயம் செம்மையடைய, மக்கள் மனதின் அழுக்குகள் அகன்று, அருங்குணங்கள் பெருகி மனிதன் மனிதனாக வாழ முற்படும் நிலையில் பண்பாடு உருவாகிறது. மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம் முதலியவற்றையும் இதனுள் அடக்கலாம். திருவள்ளுவர் பண்பாடு என்பதை உலகம் பண்புடையார் ஒழுக்கத்தால் இயங்குவதாகவும், அஃதில்லாவிடின் அழிந்து போயிருக்கும் என்பதையும்

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**

**பண்புக்கு மாய்வது மன்" -திருக்குறள்-பொருட்பால்-100:6 (996)**

என்ற குறளின் மூலம் பண்புடைய மனிதன் வாழ்வதால்தான் பண்பாடு மேம்பட்டுள்ளது என்று கூறுவது சிறப்பிற்குரியதாகும்.

**வாழ்வியல் சிந்தனை**

மானுட சமூகத்தை ஓர் இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் பெரும்பணியைச் சிறப்பான முறையில் செய்து வருவன இலக்கியங்கள் ஆகும். மானுட வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள் இருக்க வேண்டும். இன்றும் இன்னே செய்தல் வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களின் கருத்தைக் குறிக்கோளாக சமூகம் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். வாழ்வியல் அறங்களைச் சிறப்பாக வைத்துக் கொள்வோர் சோம்பலில்லாமலும், அறஞ்சாரா செயல்களைச் செய்யாது, **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'** எனும் பொதுத் தன்மையோடு இருக்க வேண்டும். சேற்றிலே பிறந்து வளர்ந்து நிற்கும் தாமரை மலர் ஒளி பொருந்திய நூற்றுக்கணக்கான இதழ்களை ஒரே மாதிரி பெற்றிருப்பதைப் போல ஏற்றத்தாழ்வில்லாத எண்ணத்துடன் வாழ்வதே சிறந்த வாழ்வியல் சிந்தனையாகும்.

**போரில் அறச் சிந்தனை**

சங்ககால மன்னர்கள் போரில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். போருக்குப் புறப்படும் மன்னன் சூளுரைத்தலும் வஞ்சினம் கூறுதலும் அவர்களின் மற உணர்வை வெளிப்படுத்துகின்றன. போரில் புண்பட்ட சேரமான் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்தபோது வெண்ணிக்

குயத்தியார் எனும் புலவர் போரில் வென்ற கரிகால் வளவனைப் புகழும் பாடலில் சேரனின் மறவுணர்வை வியந்து பாராட்டுகிறார்.

**"நின்னினும் நல்லன் அன்றே**

**………………………….**

**புறப்புண் நாணி வடக்கிருந்தோனே"** -புறநானூறு:66:5-8

என்ற வரிகள் கரிகாலனின் பெருமையைத் தெளிவுபடுத்துகின்றன. அரசர்களின் மண்ணாசையும் புகழ் மீதுகொண்ட மோகமும் போருக்குரிய காரணங்களாகப் பெரிதும் சுட்டப்படுகின்றன. ஆயினும் அரசர்கள் தாம் போற்றும் அறங்களைப் போரில் கைவிடவில்லை என்பதை நெட்டிமையார்

**"தென்புலன் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**

**……………………………..**

**அறத்துஆறு நுவலும் பூட்கை"** -புறநானூறு:9:3-6

என்ற பாடல் வரிகள் மானமும் வீரமும் கொண்டு போரிட்ட மன்னர்கள், போரிலும் அறத்தைப் பாதுகாத்தனர் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

**கொடைச் சிந்தனை**

மனிதனின் அடிப்படை உணர்ச்சி மனிதாபிமானம். எங்கெல்லாம் உதவி வேண்டி ஏக்கப் பார்வையும், சுருங்கிப்போன வயிறும், துன்பக் குரலும், இயலாமையும் நம் கண்களுக்குத் தெரிகிறதோ அங்கே நம்மால் முடிந்த உதவியைச் செய்வதே கொடைப் பண்பாடாகும். இதனை,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அ.ஃதொருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி"** **-திருக்குறள்-அறத்துப்பால்-23:6 (226)**

என்ற திருக்குறளில் தெய்வப் புலவர் ஈகைப் பண்பை எடுத்தியம்புகிறார். மேலும் **"இம்மி அரிசி துணையானும் வைகலும் ; நும்மில் இவையவகொடுத்து உண்மின்"** (நாலடியார்-94) என்ற நாலடியார் பாடல் வரிகளால் கொடைப் பண்பின் இன்றியமையாமையை அறியமுடிகின்றது. மேலும் உலகில் அறம், பொருள், இன்பம் என்று கூறப்படும் மூன்று உறுதிப் பொருட்களின் வழியில் வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்கு நமது செல்வம் உதவாமல் போனால் நாம் நம்மையே பாதுகாக்காதவர்கள் ஆவோமென்பதை

**"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்**

**ஆற்றும் பெருமநின் செல்வம்**

**ஆற்றா மைந்நிற் போற்றாமையே"** **-புறநானூறு:28:15-17**

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் தர்மம் தலைகாக்கும் என்பதையும், பகுத்துண்டு வாழும் வாழ்க்கையே நல்ல வாழ்க்கை என்பதையும் உணர்த்துகின்றன.

**வீரம் செறிந்த மானச் சிந்தனை**

சேரமான் கணைக்கால் இரும்பொறை, செங்கணான் என்னும் மன்னனுடன் பகை கொண்டான். செங்கணான் சேர மன்னனுடன் போர் புரிந்து வெற்றி பெற்று **கழுமலக்** கோட்டையைத் தன் வசப்படுத்திக்கொண்டு கணைக்கால் இரும்பொறையைச் சிறையில் அடைத்தான். சிறையில் இருந்த மன்னனுக்கு பகைவர் உண்ண உணவும், குடிக்க நீரும் தரவில்லை. ஒருநாள் மன்னனின் நாக்கு மிகவும் வறண்ட நிலையில் குடிக்க தண்ணீர் கேட்டான், காவலர்கள் அரசன் என்ற மதிப்பும் கூட இன்றி பல இகழ்ச்சி உரைகளைக்கூறி பின் நீரை அளித்தனர்.

இத்தகைய இக்கட்டான சூழலிலும் அவன் உள்ளத்தில் ஓர் அறவுரை பிறந்தது. அதாவது பிறந்த குழந்தை ஏதாவது காரணத்தினால் இறந்து விட்டாலும் அல்லது இறந்தே பிறந்தாலும் அந்தக் குழந்தையைக்கூட வாளால் காயப்படுத்திய பின்தான் மண்ணில் புதைப்பர். அவ்வாறிருக்க எந்தவித காயமுமில்லாமல் வஞ்சகத்தால் சிறை அடைக்கப்பட்ட நான் தாகத்தைக் தணிக்க நீரைக் கேட்டுப் பெற்றிருக்கிறேன். இந்த மானங்கெட்ட தண்ணீரைப் பருகவும் வேண்டுமா? என்று எண்ணியவன் நீரைப் பருகாமல் நா வறண்டு உயிர் நீத்தான் என்பதை

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**

**……………………………**

**ஈன்மரோ இங் உலகத்தானே?"** **-புறநானூறு-74:1-7**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் அரசனே ஆயினும் மானம்தான் பெரிது என்ற வாழ்வியல் சிந்தனையை நமக்கு புலப்படுகின்றது.

**விருந்தோம்பல் சிந்தனை**

**'விருந்து'** என்ற சொல்லுக்குப் **'புதுமை'** என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய்ப் புதியராக நம்மிடம் வரும் மக்களை விருந்தினா் என்றனர். அவ்வாறு அறியாதவர்களையும் அழைத்து உண்ண உணவளித்து, தங்க இடமளித்து மகிழ்ந்தனர் என்பதை,

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு"** **-திருக்குறள்-அறத்துப்பால்-9:6 (86)**

என்ற குறள் மூலம் அறியமுடிகிறது. மேலும் விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டினுள்ளே உண்ணும் உணவானது சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டாம் என்பதை

**"விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."** **-திருக்குறள்-அறத்துப்பால்-9:2 (82)**

என்று கூறுவதிலிருந்து சங்ககால மக்கள் விருந்தோம்பல் சிந்தனையில் சிறந்து விளங்கியிருந்ததை அறியமுடிகிறது. கரிகால் சோழனைக் கண்டு தன் வறுமையைத் தீர்த்துக் கொண்ட பொருநன், தன் எதிர்ப்படும் வறுமையிலுள்ள பொருநனை ஆற்றுப்படுத்தும் பொழுது, கரிகாலன் தன்னை உபசரித்த முறை குறித்து கூறுகின்றான். இதனை

**"கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்**

**…………………………………**

**உருகு பவைபோல் என்பு குளிர் கொளீஇ"** **-பொருநராற்றுப்படை 73-78**

என்ற பொருநராற்றுப்படை பாடல் வரிகளால் அறியமுடிகிறது. இப்பாடலில் பொருநன், அரசன் ஏற்கனவே என்னை அறிந்து நட்பு கொண்டவன் போல் என்னுடன் நட்பு கொண்டு விருந்து உபசரித்தார் என்று கூறினான். மேலும் விருந்தோம்பலுக்கு இன்சொல்லோடு கூடிய அருள் பார்வையும் தேவை என்பதையும், பண்டைத் தமிழர்கள் விருந்தினரை அன்புடன் வரவேற்று உபசரித்து அவர்களுக்கு உதவி செய்யும் உயரிய எண்ணத்தையும் இப்பாடலின் வாயிலாக அறியமுடிகிறது.

**அரசியல் சிந்தனை**

தனிமனித நடவடிக்கையில் தலைமைச் சான்றாக அரசின் செயல்பாடு உள்ளது. மக்களைக் காப்பாற்றவும், மக்களுக்கு நற்பணியாற்றவும் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசு தனது நெறியிலிருந்து விலகிச் செயல்பட்டால் மக்கள் சமூகம் துன்பத்தால் அழிந்துவிடும். எனவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து அரசு செயல்பட வேண்டும். மக்களும் அரசிற்கு தனது உழைப்பில் ஒரு

பங்கை வரியாகச் செலுத்த வேண்டும். அதேபோல் அரசும் மக்களின் வருவாய் நிலையறிந்து வரிவிதிக்க வேண்டும். இவ்வாறில்லாமல் அதிகப்படியான வரியை விதித்தால் மக்கள் தங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த முடியாமல் துன்புறுவா் என்பதைப் பிசிராந்தையார்

**“காய் நெல்லறுத்துக் கவளங் கொளினே,**

**……………………………**

**யானைபுக்க குலம் போலத்,**

**தானும் உண்ணான், உலகமும் கெடுமே”** -புறநானூறு-184:1-11

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் அரசனுக்கு யானையை ஒப்பிட்டுக் கூறி அரசனின் அரசியல் முறையையும் ஆட்சி முறையையும் தெளிவாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றாா்.

பதிணென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திரிகடுகமும் இதேகருத்தை எடுத்தியம்புவதை **“கொள் பொருள் வெ்.கிக் குடியலைக்கும் வேந்தனும்; உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்; இல்லிருந்து எல்லை கடப்பாடும் இம்மூவர்; வல்லே மழையறுக்கும் கோள்”** (திரிகடுகம்-50) என்ற பாடலில் அரசும் மக்களும் தத்தம் கடமைகளையாற்ற வேண்டும் என்பதை நல்லாதனார் தெளிவுபடுத்துகிறார். அறம் சார்ந்த அரசியல் சிந்தனைகள் அக்காலத்தில் சிறந்து விளங்கியது என்பதை இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**முடிவுரை**

உலக மக்கள் யாவரையும் உறவாகக் கருதும் பண்டைத் தமிழரின் உள்ளம் பண்பாட்டில் சிறந்து விளங்கியது. தமிழரின் தொன்மைச் சிறப்புகளான பண்பாட்டுக் கூறுகளையும், போரிலும் தங்களின் அறத்தைக் கடைபிடித்த முறையினையும் அறியமுடிகிறது. மேலும் மன்னா்கள் மானம் காக்க உயிர் நீத்தப் பெருமையையும், விருந்தோம்பல் தமிழரின் வாழ்வில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்ததையும் காணமுடிகிறது. ஒருவர் எத்தனை முறை விருந்திற்கு வந்தாலும் அவரை முதல் நாள் உபசரித்ததைப் போன்று இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்ததையும், அரசியலில் நடுவுநிலைமையைப் பின்பற்றியதையும் தமிழிலக்கியங்கள் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**துணை நூற்பட்டியல்**

1. திருக்குறள் -செந்தமிழ் உரை, முனைவர் செ.உலகநாதன், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-600 013, நா.ப. திசம்பர் 2014.

2. சங்க இலக்கியம் (மூலம் முழுவதும்) ச.வே.சுப்பிரமணியன் மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 600108, மு.ப. திசம்பர் 2006.

3. பத்துப்பாட்டு, உரையாசிரியர், முனைவர். ச.வே. சுப்பிரமணியன் கோவிலூர் மடாலயம், கோவிலூர்-630 307, மு.ப. ஏப்பிரல் 2004.

4. தமிழர் நாகரீகமும் பண்பாடும், டாக்டர்.அ.தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு, சென்னை-600040, மு.ப. செப்டம்பர் 1994.

# முத்தொள்ளாயிரம் காட்டும் வாழ்வியல்

***முனைவர் வா.பாக்யலெஷ்மி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ குமர குருபரசுவாமிகள் கலைக்கல்லூரி, ஸ்ரீவைகுண்டம்.

சங்க இலக்கியங்கள் மூலம் மக்களின் சமூக அமைப்பையும் வாழ்க்கை நிலை, சமூக நெறிமுறைகளையும் நாம் அறிந்து கொள்கிறோம். சங்ககாலமே தமிழகத்தின் பொற்காலம், சங்ககால மக்கள் உயர் நாகரிகம் பெற்று வாழ்ந்தனர். அச்சங்ககால மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டப் பயன்படும் வரலாற்று ஆவணம் தான் இலக்கியம். இலக்கியங்கள் வாயிலாக மனிதர்கள் வகுத்துக் கொண்ட உயர் வாழ்க்கை நெறி அதை அடைய அவர்கள் மேற்கொண்ட வழிமுறைகளை அறியலாம். இலக்கியங்கள் தொன்மை நலம் சார்ந்தவை. அந்த வகையில் முத்தொள்ளாயிரம் என்றும் செவ்வியல் இலக்கியம் மூன்று வேந்தர்களையும் அவர்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளையும் மக்களின் வாழ்வியலையும் எடுத்துரைக்கிறது.

**செவ்வியல் இலக்கியம் முத்தொள்ளாயிரம்**

மூவேந்தர்களையும் ஒருங்கே இணைத்த செவ்வியல் இலக்கியம் முத்தொள்ளாயிரம். மூன்று வேந்தர்களுக்கும் தொள்ளாயிரம் (3 x 900 = 2,700) பாடல்கள் என இரண்டாயிரத்து எழுநூறு பாடல்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இன்று கிடைப்பவை நூற்றி ஒன்பது (109) மட்டுமே. தமிழர்கள் அக வாழ்க்கையில் சிறந்து புற வாழ்க்கையிலும் புகழுடன் திகழ்ந்த வரலாற்றைக் கூறும் நூல் முத்தொள்ளாயிரம். இது அகப்புறக் கைக்கிளைக் காதலை வெளிப்படுத்துகிறது.

**தமிழர் வாழ்வியல்**

தமிழின் முதன் முழுமையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியமும் முதல் சங்ககாலம், சங்கம் மருவியகாலம் இவற்றில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்துமே சங்க மக்களின் வாழ்வியல் ஆதாரங்கள் ஆகும். கற்பனையோடு கூடிய மனித வாழ்வு அவற்றில் பொதிந்துள்ளன. பழங்காலத்தை அறிந்து அவற்றோடு நிகழ்காலத்தை ஒப்பு நோக்கி வருங்காலத்தை எண்ணித் திட்டமிட சங்க இலக்கியம் ஆதாரமாய் உள்ளது. அவ்வகையில் முத்தொள்ளாயிரத்தில் சங்கத் தமிழரின் வாழ்வியலை நாடு, நகரம், மக்கள், அரசு, களவு, கடவுள் கொள்கை, பழக்கவழக்கங்கள், போர்கள், கொடை இவை வாயிலாக அறியலாம்.

**நாடு, நகரம்**

மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் ஆண்ட பகுதிகளும் அவர்களின் தலைநகரங்களான வஞ்சி, உறையூர், கூடல் போன்ற நகரங்கள் பற்றிய செய்திகளும் காவிரி பூம்பட்டினம், கொற்கை இவற்றின் வர்ணனைகளும் அந்நகரின் வளத்தையும் எழிலையும் பாடல்கள் பலவும் காட்டுகின்றன. கொற்கையில் விளையும் முத்து, சோழநாட்டின் சந்தனம் என அந்நாட்டின் வளத்தை எடுத்துரைக்கின்றன.

**“பூம்பொழில் வஞ்சி அகம்”** **(முத்தொள் - 15)**
**“மன்னன் புனல்நாடன் வெளவினான்”** **(முத்தொள் - 34)**
**“நெடு மாடக் கூடல் அகம்”** **(முத்தொள் - 89)**

என மன்னர்கள் ஆண்ட பகுதிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**ஊரார்**

மக்கள் வாழ்வு செழிப்புற வேண்டுமாயின் நாடு வளமுடையதாய் இருத்தல் வேண்டும். வளமுடைய நாட்டினைக் காட்டிய புலவர் மக்கள் வாழ்வின் செழுமையையும் உயர்வையும் தம் பாடல்களில் முன் வைக்கிறார். உழவர், வணிகர், அந்தணர், வேடர், காவலர், இடையர்கள் எனத் தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்ட மக்களைப் பற்றியக் குறிப்புகள் உள்ளன. மேலும் அக இலக்கியங்களில் முதன்மை பெறும் தலைவி, தோழி, செவிலி, ஊரார் கூற்றுகளும் உள்ளன.

**"காவல் உழவர் களத்தகப்போர் ஏறி" (முத்தொள் - 45)**

**"குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்" (முத்தொள் - 55)**

**"அந்தணர் ஆவோடு பொன் பெற்றார்" (முத்தொள் - 46)**

என மக்கள் எவ்வகைத் தொழிலை ஏற்றிருந்தனர். அவர்களின் நிலை மற்றும் வாழ்வு எனப் பல குறிப்புகள் உள்ளடக்கி இருக்கின்றன.

**அரசாட்சி**

நாடும் மக்களும் வளமாக அமைய அடிப்படை அரசு. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" – (புறம் - 186) என மோசிகீரனார் கூறுகிறார். மன்னன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி. குடிகளை நன்முறையில் காக்கும் மன்னன் கீழ் அவன்அடி தழுவி நிற்கும் உலகு என மன்னனுக்கு வரையறை செய்கிறார் வள்ளுவர். அவ்வகையில் முத்தொள்ளாயிரம் தம் மக்களின் நலன் பேணி பகை நாட்டினரின் அச்சத்தை நீக்கி மக்களுக்கு அரணாய் மன்னர் வாழ்ந்ததை,

**"மதியனையான் விண்ணுயர் கொல்லியர்"**

**கோன் சேரன் கோதையென்பான் தர (முத்தொள் - 45)**

என்ற வரிகளில் கூறுவர். அறத்தை நிலை நிறுத்தியும் அந்தணரை நம்பியும் மக்களின் நலனே நாட்டுயர்வு என எண்ணி அரசாட்சி புரிந்தனர்.

**கடவுள் நம்பிக்கை**

சங்ககாலத்தில் திணை அடிப்படையில் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் அவர்களுக்கென தனித் தெய்வங்களையும் வழிபட்டனர். அகத்திணை அடிப்படையில் இம்முத்தொள்ளாயிரம் அமையவில்லை யானும் கடவுளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. கடவுள் வாழ்த்தோடு பாடல் தொடங்குகிறது.

**"மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றை**

**முன்னம் படைத்த முதல்வனை" (முத்தொள் - 1)**

என்ற அடிகளில், ஆதிரையான் என சிவபெருமானையும்

**"மடங்கா மயில் ஊர்தி மைந்தனை நாளும்**

**கடம்பம்பூக் கொண்டேத்தி அற்றால்" (முத்தொள் - 90)**

என அன்று வழங்கிய மாபாரதத் தொன்மக் கதையையும் அவர்கள் வணங்கிய சிவன், திருமால், முருகன் போன்ற கடவுளர் பற்றிக் குறிப்புகள் வாயிலாக கடவுள்க்கு முதன்மை அளித்தமையையும் அறியலாம்.

**நாகரிகக் குறிப்புகள்**

நாகரிகம் என்பது புறத்தின் பாற்பட்டது. இவற்றில் ஊர், வீடு, உணவு, உடை, அணிகலன்கள், தொழில், ஊர்தி இவை அனைத்தும் அடங்கும்.

**"தேயத் திரிந்த குடுமியவே"** (முத்தொள் - 2)

என்ற அடிகளில் குடுமி என்ற சுழியாணிகள் கதவில் பயன்படுத்தப்பட்டன என்றும்,

**"சோறடுவார் ..**

**ஆரத்ததால் தீமூட்டும் அம்பொதீ"** (முத்தொள் - 71)

உணவு சமைக்க சந்தன மரத்தைப் பயன்படுத்தினர்.

**"கைய தவன் கடலுள் சங்கமால் பூண்டதுவும்**

**செய்ய சங்கீன்ற செழுமுத்தால்"** (முத்தொள் - 67)

என அன்றைய பெண்கள் சங்கு வளையல்கள், சங்கினில் முத்துப் பதித்த ஆரங்களை அணிந்தனர் என்றும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மன்னர்கள் குதிரை மற்றும் யானைகளைத் தமது வாகனங்களாகப் பயன்படுத்தினர். மன்னன் உலா போகுமிடத்தும் போரிடத்தும் இவற்றைப் பயன்படுத்தியதைப் பற்றிக் குறிப்புகள் காணப்படுகின்றன.

**"புனவட்டப் பூந்தெரியல் பொற்றேர் வழுதி**

**கனவட்டம் கால் குடைந்த நீறு"** (முத்தொள் - 75)

என்று இப்பாடல் உணர்த்துகிறது.

மக்கள் பலரும் ஆடுமாடு மேய்த்தல், முத்தெடுத்தல், உழவுத்தொழில், வேதம் ஓதுதல், பூவிற்றல் போன்ற தொழில் பற்றியக் குறிப்புகள் உள்ளன.

**"மாலை விலை பகர்வார் இள்ளக் களைந்த பூச்**

**சால மிகுவதோர் தன்மைத்தால்" –** (முத்தொள் - 44)

என்ற வரிகள் வாயிலாக மக்கள் எவ்வாறு நாகரிகம் பெற்றிருந்தனர் என அறியலாம்.

**பழக்கவழக்கங்கள்**

பழக்க வழக்கம் என்று புழங்கும் தொடரே இவ்விரு சொற்களுக்கிடையே பொருள் வேறுபாடு உண்மையைப் புலப்படுத்தும் இப்பழக்கத்தின் விளக்காகச்

**"சித்தரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்**

**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்"**

என்றும் வெண்பாவில் "கை" "நா" என்னும் புறத்துறுப்புகள்

மேலும் "மனம்" என்னும் அகத்துறுப்பின் மேலும் பழக்கத்தை வைத்து ஔவையார் தெளிவுப்படுத்துவார். மக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு பழக்க வழக்கங்களை கையாள்கின்றனர். சங்ககாலத்திலும் பல்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ளனர், முத்தொள்ளாயிரமும் சில வழக்கங்களைக் குறிப்பிடுகிறது.

- தலைவிக்கு நடத்தப்படும் "வெறியாட்டு" வெள்ளாட்டின் இரத்தத்தைத் தூவி நிகழ்த்தினர்.

- தோற்ற பகை மன்னனுக்கு திறை செலுத்தினர். மக்கள் பொருளில் ஆறில் ஒரு பங்கை வரியாகச் செலுத்தினர்.
- மக்களுக்குச் செய்தியை அறிவிக்க யானை மீது பறையறைந்து வீரர்கள் அறிவித்தனர்.
- தோற்றப் பகை நாட்டினை எரியூட்டியப்பின் கடுமுள்ளி, அருகம்புல், பரவி, பேய்ச்சரை, வேளைப்பூடு போன்ற விஷச்செடிகளை நட்டு ஊரை முற்றிலுமாக அழித்தனர்.
- மன்னனை அடைய எண்ணி தலைவியர் கூடற்சுழி (கூடலிழைப்பது) இணைத்தனர்.
- தங்கத்தின் தரத்தை அறிய பெரிய கட்டளைக்கல் கொண்டு உரசிப் பார்த்தனர்.
- கணவன் இறந்த பின்னர் பெண்கள் கைம்மையோடிருந்த தபாத நிலையும் கணவன் இறந்த பின்னர் இறந்த மூதானந்தம் என்னும் நிலையும் கூறப்பட்டுள்ளது.
- மன்னன் வருகையை உணர்த்த வலம்புரிச் சங்குகள் ஊதப்பட்டன.
- பிணியுற்றோருக்கு அவர்களின் பிறந்த நாளன்று நோய்மிகும். இவை வாயிலாக அன்றைய நம்பிக்கைகள் வழக்கங்களையும் அறியலாம்.

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனை

***ஆ.சுரேஷ்,** உதவிப் பேராசிரியர், என்.பி.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நத்தம்.

**முன்னுரை**

பண்டைய தமிழ் மக்கள் தனிமனிதனையும், சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். குறிஞ்சி, முல்லை, முதலிய ஐந்திணை ஒழுக்கம் பற்றிக் கூறிய தொல்காப்பியர் இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு அன்போடு புணர்ந்த ஐந்திணை என்று கூறியுள்ளது. எவ்வகை இலக்கியமாக இருந்தாலும் மனித வாழ்க்கைக்குரிய அறத்தைக் கூறும் இலக்கியமாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளதை நல்லொழுக்க விதிமுறைகளையும் அறிவுறுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் நீதி இலக்கியங்கள் வலியுறுத்தும் வாழ்வியல் அறங்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**அன்பின் சிறப்பு**

எவ்வித பிரதிபலனும் பாராமல் ஒருவர்க்கு ஒருவர் காட்டும் பரிவே அன்பாகும். அன்பாலே அகிலம் இயங்குகிறது எனலாம். பிறரிடம் அன்பு செலுத்தி விருப்புடன் இருக்கும் தன்மையானது நமக்கு நட்பு என்னும் அளவுகடந்த சிறப்பைப் பெற்றுத் தரும்.

**“அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நன்பென்னும் நாடாச் சிறப்பு** (குறள்) 74.

அன்பு என்பது மனிதர்களிடம் மட்டுமின்றி அனைத்து உயிரிகளிடத்தும் உள்ளது. அன்பினது சிறப்பைப் பற்றி ஐந்திணை ஐம்பது நூலில் சிறிய சுணையில் உள்ள நீரானது ஒருவர்க்கே தாகம் தீர்க்கும் என்று கருதிய ஆண்மான் பெண்மானை அருந்தச் சொல்கிறது. ஆனால் பெண்ணோ தான் இணையையும் சேர்த்து உண்ணச் சொல்கிறது. தான் அருந்தினால் நீர் தீர்ந்துவிடும் என்று கருதி தன்பிணை உண்டு மகிழட்டும் என்று எண்ணி ஆண்மான் நீரை அருந்துவது போல் நீரில் வாயை வைத்து இருந்தது.

**“ சுனைவாய் சிறுநீரைஎய் தாதென்று எண்ணிப்**
**பிணைமான் இனிதுண்ணவேண்டிக்-கடைமான் தன்**
**கள்ளத்தின் ஊச்சுஞ்சு சுரமென்பர்காதல்**
**உள்ளம் பாடர்ந்தநெறி”** **(ஐந்திணை ஐம்பது)-38.**

அஃறிணை உயிரிடத்தும் அன்பு நிறைந்துள்ளதை அறிய முடிகிறது.

**தாய்வழிச் சமூகம்**

தாய்வழிச் சமூக அமைப்பில் பெண்ணுக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதகுலப் பரிணாம வளர்ச்சியின் உயிர்நாடியாகப் பெண் திகழ்வதோடு, சமுதாயத்தின் முக்கிய ஆக்கப் பணிகளிலெல்லாம் பெண் முதன்மை இடம் பெற்றிருந்தாள். “தாய்வழி முறைமைச் சமூகத்தில் பெண் ஆணைச் சார்ந்து இருப்பதில்லை. தாய்வழி உறவினர் சிறப்புப் பெற்றிருந்தனர். சந்ததித் தோற்றம் தாயை முன்வைத்து அறியப்பட்டது. பெண் வேட்டையாடிய

போது குழந்தைகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தாள். தந்தை என்பவர் இல்லை”[16] என்று தாய்வழிச் சமூகம் பற்றி அரங்க-மல்லிகா கருத்துத் தெரிவிக்கிறார்.

**இல்லறம்**

வாழ்வியல் கூறுகளில் முதன்மையானது இல்லறமாகும். இல்லறம் அன்பிற்கும், அறத்திற்கும் முதலிடம் தருவதாகும். துறவிகள், பெரியவர்கள், அகதிகள் ஆகியோருக்கு உதவி செய்து அன்போடு அறத்தையும் கடைபிடித்து வருவதாகும்.

**“இல்லறமல்லது நல்லறமன்று”** **(கொன்றை வேந்தன்)**

இல்லறந்தான் துணைக்கொண்டே துறவறத்தான் வாழ வேண்டி இருப்பதால் இல்லறமே சிறந்ததாகும். வாழ்வியல் நெறிமுறைகள் முக்கிய கூறான இல்லறத்தில் விருந்தோம்பல் இன்றியமையாத ஒன்றாகும். தமிழர் பண்பாட்டில் போற்றுதலுக்குரிய பண்பு விருந்தோம்பல். தன் இல்லத்தை நாடி வந்தவர்க்கு இல்லையென்று சொல்லாது மனம் மகிழுமாறு உபசரித்தலே நல்ல குடும்பப் பெண்ணின் கடமை ஆகும். நீதி இலக்கியங்களும் விருந்தோம்பலைத் திறம்படக் கூறியுள்ளது.

**“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று”** **(குறள்)**

தம்மை நாடி வந்த விருந்தினர் வீட்டின் வெளியில் இருக்கத் தான் மட்டும் உண்பது அமிழ்தமே ஆயினும் அச்செயல் விரும்பத்தக்கது ஆகாது. விருந்தோம்பி உண்பதே சிறப்பாகும் என்பதை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

**தொல்காப்பியர் காலம்**

“இளமையில் தந்தையையும், பின்னர் கணவனையும் முதுமையில் மகனையும் சார்ந்து இருக்க வேண்டியவள் பெண் என்ற மனுநெறி கருத்தைப் போன்றுதான் தொல்காப்பியம் கூறுகிறது”[7] என்று பாலசுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார். குடும்ப வாழ்வில் ஈடுபடும் பெண்ணையும், ஆணையும், தலைவன், தலைவி என்று குறிப்பிடுவது இலக்கிய மரபு. தலைவனும் தலைவியும் ஒத்த பண்புகள் உடையவராக இருப்பதே சிறந்தது என்று கருதியவர் தொல்காப்பியர்.

தலைவனுக்கும் தலைவிக்கும் இருக்கவேண்டிய பத்துப்பண்புகளாக பிறப்பு, குலச்சிறப்பு, அழகு, வயது, கல்வி, நிறை, அன்பு, அருள், செல்வம், உணர்வு என்ற இப்பண்புகள் இருவருக்கும் ஒத்து இருக்கலாம். அப்பண்புகளில் ஏதாவது ஒன்று தலைவனுக்கு உயர்ந்து இருக்கலாம் என்பார் தொல்காப்பியர். இதனை,

**“ ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலதாணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே”[8]**

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறிய முடிகிறது. மேலும் தொல்காப்பியர் ஆணுக்கு உயர்வு கொடுத்துள்ளதை

**“பெருமையும் உரனும் ஆடூஉ மேன”[9]**

என்ற நூற்பாவின் மூலம் அறியமுடிகிறது.

**உ.வே.சா.கூற்றில் ஈகை**

“கண்நோக்கும், நகைமுகமும், உள்ளத்தின் உவப்பைக் காட்டும் மனம், சொல், செயல் என மூன்றாலும் விரும்பிச் செய்வது ஈகை” என்கிறார்.

இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவி செய்வதே ஈகை எனப்படும். மற்றவர்களுக்கும் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்து செய்வதாகும்.

**"வறியவர்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து"** (குறள்- 221)

உலகில் மக்களிடையே வழங்கும் சாதிவேறுபாடுகளெல்லாம் உண்மையான வேறுபாடுகளல்ல. உலகில் இரண்டே சாதிதான் உண்டு. அவை யாதெனில் இல்லாதவர்களுக்குக் கொடுப்போர் உயர்ந்த சாதி. கொடுக்காதவர் தாழ்ந்த சாதி என்று கூறுகிறது நல்வழி.

**"சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்**
**நீதிவழுவாநெறி முறையின் - மேதினியில்**
**இட்டார்பெரியோர் இடாதாரிழிகுலத்தோர்**
**பட்டாங்கிலுள்ளபடி"** (நல்வழி-2)

**ஒழுக்கம்:-**

**"உங்களது நற்பெயரைக்காக்க விரும்பினால் நல்லவர்களோடு**
**இருங்கள் அல்லது தனியாக இருப்பதேமேல்"** (ஜார்ஜ் வாஷிங்டன்)

**"ஒழுக்கத்தின் எய்துவார் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவார் எய்தாப் பழி"**

விலங்குகளில் இருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவது ஒழுக்கம் ஆகும். மனிதன் உயர்வடைய ஒழுக்கத்தைப் பின்பற்றுதலே உரிய வழியாகும்.

வள்ளுவர் மனிதகுலம் சிறப்புடன் வாழ பல நன்னெறிகளை வகுத்துத் தந்துள்ளார். அதில் முக்கியமானது ஒழுக்கம் ஆகும். ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டிய அன்புடைமை, அடக்கமுடைமை, அருளுடைமை எனப்பலவகை அறத்தை வகுத்துக் காட்டுகிறார். ஆனால் அவை அனைத்தையும்விடச் சிறந்தது ஒழுக்கமே ஆகும்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** (குறள்- 131)

இதையே முதுமொழிக்காஞ்சி உலக மக்களிடையே சிறந்ததாக ஒழுக்கம் கருதப்படுகிறது என்பதனை

**"ஆர்கலி உலகத்துமக்கட் கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை"** (முதுமொழிக்காஞ்சி-1)

**வாய்மை**

"வாய்மையே வெல்லும்" என்பதே நம் நாட்டின் குறிக்கோளாகும். வாய்மையின் வழியைப் பின்பற்றுதலில் கண்ணும் கருத்துமாக இருப்பதால் தான் அரசு இலச்சனையில் வாய்மையே வெல்லும் என்பது பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்மையின் சிறப்பை அற இலக்கியங்கள் விளக்குகின்றது.

**"வாய்மை என்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்"** (குறள்- 291)

என்று வாய்மைக்கு விளக்கம் தருகிறார்.

**சத்தியம்**

'சத்தியம்' என்ற வடமொழிச் சொல்லை உண்மை, வாய்மை, மெய்மை என மூன்று சொற்களாக குறித்தனர்.

> **"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
> **தானஞ்செய் வாரின் தலை"** (குறள் -295)

அறமும், தவமும் செய்வததைக் காட்டிலும் உள்ளமறிந்து உண்மை பேசுதல் உயர்ந்ததாகும். வாய்மை தவறாது வாழ்ந்த அரிச்சந்திரனைப் போன்று வாழ்தல் நமது கடமை. அவர் பதவியிழந்து, பலனை இழந்து நின்ற போதும் வாய்மைத்தவறாது இருந்ததால் இன்றும் அனைத்து உள்ளங்களிலும் வாய்மைக் காத்த வல்லளாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

> **"தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும்**
> **தருமம் மறுபடியம் வெல்லும்"**

எனும் கருத்தின்படிப் பொய்மைகள் அடுக்கடுக்காய் அடைந்தாலும் இறுதியில் "வாய்மைமே வெல்லும் என்பதை அசைக்க முடியாத நம்பிக்கையாக அனைவரும் கொண்டு வாழ்தல் வேண்டும். இதன் மூலம் மக்களுக்கு வாழ்வியல் அறங்களை வலியுறுத்துவதில் நீதி இலக்கியங்கள் பெரும் பங்காற்றின என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

வாழ்க்கை நெறிகளைக் கற்றுத்தந்த இலக்கியங்களைப் பின்பற்றி வாழ்ந்து காட்டிய வரலாற்று நாயகர்களின் வாழ்க்கைப் பயணத்தை வழித்துணையாகக் கொண்டு வெற்றிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்போம். பயனுள்ள மிகச்சிறந்த வாழ்வை தமதாக்கிக் கொள்ள முன்வருவோம்.

**துணை நூற்பாட்டியல்:**


1. திருக்குறள் - திருநாவுக்கரசு – வசந்தம் பதிப்பகம்
2. ஐங்குறுநூற்றில் பெண்ணியச் சிந்தனைகள்-ஞா.சுரேஷ் ஆய்வு நூல்
3. பதிணெண்கிழ்கணக்கு நூல்கள் - ஆசிரியர் குழு
4. இலக்கிய வரலாறு – டாக்டர் கதிர் தமிழர் பதிப்பகம்
5. நீதிக்களஞ்சியம் - புலவர் குழந்தை சாரதா பதிப்பகம்.

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***சு.ருக்குமணி,** உதவிப் பேராசிரியர், என்.பி.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நத்தம்.

**"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை**
**தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ"**

**முன்னுரை**

தமிழ் இலக்கியம் தொன்மையானது, வரலாற்றுச் சிறப்புடையது, பிற நாட்டினர் நாகரீக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்கே உரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டது. உழவு எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மக்களின் மனத்தைப் பண்படுத்துவது பண்பாடு, வீரம், கொடை, இயற்கையோடு இயைந்த வாழ்வு, கலை, விருந்தோம்பல் பண்பு, தொழில், நடுநிலைப்பண்பு,தெய்வவழிபாடு இல்லற வாழ்வின் சிறப்பு, போன்ற வாழ்வியல் கூறுகள் இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப மக்களிடையே மாற்றம் பெறுகின்றது. ஆதலால் சங்ககால மக்கள் தங்கள் வாழ்வில் கடைபிடித்த நெறிமுறைகளைப் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்

**விருந்தோம்பல் பண்பு**

விருந்தோம்பல் பண்பு பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கு வள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தையே படைத்துள்ளார். அதில்

**"வருவிருந்து வைகலும் ஒம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று"** (குறள்-83)

என்கிறார். தன்னுடைய வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு விருந்து உபசரிப்பது தமிழரின் தலையாயக் கடமையாகும். தினமும் விருந்தினர் நாடி வந்தாலும் முகம் கோணாமல் உபசரிப்பவனுடைய வாழ்க்கை வறுமையால் துன்பப்படுவதில்லை என்கிறார் வள்ளுவர் . இவரைப் போலவே அதியமான் ஔவையார்க்கு விருந்து உபசரித்ததை புறநானூற்றில் 101-ம் பாடல் விளக்குகிறது. அவை

**"ஒருநாட் செல்லலாம், இருநாட் செல்லலாம்**
**பலநாள் பயன்று பலரோடு செல்லினும்**
**தலைநாட் போன்ற விரும்பினன் மாதோ"** (புறம் -101)

அதியமான் நெடுமான் அஞ்சி என்பவன் தன் அரசவைக்கு பொருள் இரந்து வருபவர்க்கு எவ்வாறு முதல் நாள் உணவு அளித்தானோ, அதே போன்று பல நாள் சென்றாலும் முதல் நாள் விருந்து உபசரித்ததைப் போன்று சிறப்பாக விருந்து அளிப்பான் என்று ஔவை பாடியுள்ளார். 'விருந்தும் மருந்தும் மூன்று நாள்' என்பது ஒரு தமிழ்ப்பழமொழி அதையும் விஞ்சியவன் அதியமான் என்பதை மேற்கண்ட அடிகள் முழங்குகின்றன.

**கற்பு**

மகளிர்க்குரிய பண்புகளுள் முதன்மையாக இடம்பெறுவது கற்பெனும் பண்பாகும். கற்பு என்பது இல்லறத்தாற்குரிய ஒரு கட்டுப்பாடாகும். இந்தக் கட்டுப்பாடே கற்பு நெறியாகும். மகளிர்க்கு உயிரைக் காட்டிலும் நாணமும், நாணத்தைக் காட்டிலும் 'கற்பு' மிகச் சிறந்தது என்பதை,

**"உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்**
**செயிர் தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"** (தொல்-1059)

தொல்காப்பியம் முன்மொழிகின்றது. செல்வக் குடியில் பிறந்த தலைவி தான் புகுந்த இடத்தில், மான் உண்டு எஞ்சிய நீரானது தேன் கலந்த பாலை விட இனிமையாக இருந்தது

என்று தலைவனது நாட்டைப் பாராட்டுகின்றாள். வறுமையால் வாடியபோதும் பெற்றோரின் உதவியை நாடாது வாழ்ந்த திறத்தினாள் தலைவி என்பதை,

**"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்"**

மேற்கண்ட அடி எடுத்துரைக்கின்றது.

**மூடநம்பிக்கைகள்**

எல்லா இன மக்களிடமும் பல மூடநம்பிக்கைகள் இருந்து வருகின்றன. இந்த நம்பிக்கைகள் ஒன்றன் மீது உள்ள ஆர்வத்தாலும், அச்சத்தாலும் ஏற்படுபவை. பல்லி சொல்லை நம்புவது தமிழரின் பாரம்பரியப் பழக்கமாக இருந்து வருகிறது. பிரிவு துயரத்தாள் வாடியிருந்த தலைவி பல்லி கத்தும் போதெல்லாம் 'நல்லதுசொல்' என்று வேண்டினாள். அவை,

**"பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன்**
**நல்எழில் உண்கண்ணும் ஆடுமால் இடனே"**

என்று கலித்தொகை கூறுகிறது. பேய் செய்யும் தீமையிலிருந்து தப்பிட வேம்பு குழைகளை வீட்டில் செருகி வைப்பார், பின்பு வெண்சிறு கடுகு புகைப்பர், காஞ்சிப்பண்பாடுவர், தூபம் எடுப்பர் இவ்வாறு செய்தால் பேய் ஓடிவிடும் என்று சங்ககால மக்கள் நம்பியதை புறம் (பாடல் 28) கூறுகிறது.

**"பல்ஆ பயந்த நெய்யில், தொண்டி**
**முழுதுடன் வளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
**எழுகலத்து ஏந்தினும சிறிது என்தோழி**
**பெருள்தோள் நெகழ்த்த சொல்லிற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.**** (குறுந்-210)

என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவன் வரவைச் சுட்டிய காகத்திற்குக் கைமாறாக பசுக்களின் பாலினால் கிடைத்த வெண்ணெய்யை வெண்ணெல் அரிசியால் உண்டாக்கிய சோற்றோடு கலந்து அதனை ஏழு கலங்களில் உண்ணக் கொடுப்பேன் என்றாள் தோழி. அதாவது காகம் வீட்டின் முன்பு கரைந்தால் ஏதவாது ஒரு நல்ல காரியம் நடக்கும் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்ததை அறிய முடிகிறது.

**கொடை**

பெருஞ்சித்திரனார் குமணவள்ளலிடம் பெருஞ்செல்வத்தைப் பரிசாகப் பெற்றுவந்து தன் மனைவியிடம் கொடுத்து, நின்னை நாடி வருபவர்களுக்கும், உனது உறவினர்களுக்கும் பகிர்ந்து வழங்குக என்றார். அவை

**"நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கு**
**பன்மாண் கற்பினின் கிளை முதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாழநின்**
**நெடுங்குறி யெதிர்பண்பை நல்கி யோர்க்கும்"** (புறம் : 163 :1-4)

புலவர்கள் தான் பெற்ற பரிசினை மற்றவர்க்கு பகிர்ந்து கொடுக்கும் ஈகைப் பண்பினைக் கொண்டவர்காளக வாழ்ந்தமையை மேற்கண்ட பாடல் நமக்கு அறிவுறுத்துகிறது.

**உடை**

சங்க கால மக்கள் அவரவர் நிலைக்கேற்றவாறு உடை அணிந்தனர். ஆண்கள் இடுப்பில் ஓர் ஆடையும், மேலே ஒரு துண்டும் அணிந்ததை

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே"** ( புறம் - 189)

என்று நக்கீரர் கூறுகிறார். பெரும்பாணாற்றுப்படை நூலில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆடை பற்றிக் கூறியுள்ளார். அவை

**"புனைவிரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ**
**ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்"** (பெரும்பா- 469)

புகை போலவும், பாலாடை போலவும் ஆடை இருந்ததாக குறிப்பு உள்ளது.

**அறம்**

சங்க கால மக்கள் உலகளாவிய நோக்கும், பரந்துபட்ட மனமும் கொண்டவர்களாக இருந்தனர். இவ்வுலகில் உள்ள அனைத்து மானிடரும் ஓர் இனமே என்ற உயர்ந்த

மனப்பான்மையில் இருந்ததை "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று கணியன் பூங்குன்றனார் பாடியுள்ளார். மேலும்,

**"அமிர்தம் இயைவதாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே"**

தேவர்கள் அரிதற்கரிதான அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாது பிறர்க்கு கொடுத்து உண்ணும் நல் மனம் படைத்த சான்றோர்கள் வாழ்ந்ததை புறநானூற்றுப் பாடல் நமக்கு அறிவுறுத்துகிறது மேலும், மணிமேகலை நூலானது

**"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
**மறவா தீதிதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உறையுளும் அல்லது கண்டதில்"**

உணவு, உடை இருப்பிடம் இம்மூன்றும் ஒருவனுக்கு அடிப்படைத்தேவை இத்தேவைகளை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்ற நல்லறத்தை இந்நூல் கூறுகிறது. "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்று மணிமேகலை கூறுகிறது. உணவு எவரொருவர் மற்றவர்க்கு கொடுத்து உதவுகிறாரோ அவர் உயிர் கொடுத்ததற்குச் சமம் என்கிறது இந்நூல்.

**நடுநிலைமைப்பண்பு**

தவறு நிகழும் பொழுது அதைச் சுட்டிக் காட்டி அறிவுறுத்தும் பண்பினைக் கொண்டவர்களாக புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்திருக்கின்றனர். தொல்காப்பிய நூலானது

**"வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்** (தொல்-1368)

என்று கூறுகிறது. அதாவது புலவர்கள் அரசன் தவறு செய்யும் போதெல்லாம் கடுஞ்சொற்களை செவிமடுக்குமாறு கூறி தவறை உணர்த்த வேண்டும் என்கிறது வள்ளுவரும்

**"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும் "** (குறள் - 448)

வேந்தனிடம் தவறு கண்டபொழுது தமக்குப் பரிசு நல்கினானே எனத் தாழ்ந்து விடாமல் தவறைச் சுட்டிக்காட்ட வேண்டும்

**"காய்நெல் அறுத்துக் கவனம் கொளினே**
**யானை புக்க பலம் போலத்**
**தானும் உண்ணான் உலகமுங்கெடுமே"** (புறம் - 1184)

வரிவாங்கும் முறை பற்றி குறிப்பிடும் பொழுது மக்களிடமிருந்து அளவுகடந்த வரிகளைப் மன்னன் பெற்றால் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாவாய் என்று பிசிராந்தையார் நலங்கிள்ளிக்கு செவிமடுக்குமாறு எடுத்துரைக்கிறார். இப்பாடலில் அரசன் செய்யும் தவறை புலவர் சுட்டிக் காட்டியதை நாம் உணர முடிகிறது.

**மருத்துவம்**

சங்க கால மக்கள் போரில் ஈடுபட்டு வீரமரணம் அடைவதை பெருமையாகக் கருதினர். போரில் எற்பட்ட உடல்புண்ணிற்கு அத்தி மரத்தின் பாலும் பட்டையையும் பயன்படுத்தினர். அவை,

**"இரும்புச்சுவை கொண்ட விழுப்புண்நோய் தீர்த்து**
**மருந்து கொள் மரத்தின் வாள்வடு மயங்கி**
**வடுவின்றி வடிந்த யாக்கையன்"** (புறம் 180)

சங்ககால மக்கள் தனக்குத்தானே மருத்துவர்களாக இருந்ததை மேற்கண்ட அடிகள் உணர்த்துகிறது.

**திருமணம்**

திருமணம் என்பது மனிதனால் மனிதனுக்கு நடத்தப்படுகின்ற ஒருவகைச் சடங்கு. இத்திருமணம் ஆதிகாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. பின்னர் வந்ததாகத் தொல்காப்பியர் கூறுகிறார். அவை

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்று"** (தொல் : 1091)

பொய்யும், வழுவும் தோன்றிய பின்னரே திருமணச் சடங்குமுறை உருவானது என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் திருமணங்கள் நிழ்ந்ததை அகநானூற்றில் 36-ம் பாடல் கூறுகிறது. அவை

**"நீரோடு சொரிந்த ஈர்இதழ் வுலிரி**
**பல்இருங் கதுட்டின் நெல்லொரு தயங்க**
**வதுவை நன்மணம் கழிந்த பின்றை"**

அகவாழ்வில் குற்றம் நிகழாதவாறு தடுக்க திருமணம் என்ற சடங்கினை ஏற்படுத்தியுள்ளனர்.

**உணவுப் பழக்கவழக்கங்கள்**

மனிதனின் முக்கியத் தேவைகளுள் ஒன்று உணவு. சங்ககால மக்கள் சத்தான உணவு வகைகளைச் செய்வதில் கைதேர்ந்திருந்தனர். கொள்ளு பயறு வகைகளைப் பொடி செய்து பாலுடன் சேர்த்து கலக்கி கஞ்சி காய்ச்சி குடித்த செய்தி அகநானூற்றுப் பாடலில் உள்ளது. அவை

**"கொள்ளொடு பயறுபால் விரைஇ, வெள்ளிக்**
**கோல் வரைந்தன்ன வால் அவிழ் மிதவை"** (அகம் : 37)

என்ற அடியின் மூலம் ஊட்டச்சத்து மிகுந்த உணவை மக்கள் உண்டனர் என்பதை அறிய முடிகிறது.

நன்றாகக் காய்ச்சிய பாலில், தயிர், சிறிது ஊற்றி உறைய வைத்தால் கெட்டித் தயிர் உருவாகும். இது 'அழது ஊற்றுதல், உறை ஊற்றுதல்' என்று பல பெயர்களில் கூறப்படுகிறது. அப்படி உருவாகிய கெட்டித் தயிரைக் கட்டி இல்லாமல் பிசைந்து அடிப்பிடிக்காமல் துழந்து தயாரிக்கப்படுவது தீம்புளிப்பாகர். இது இன்று மோர்க்குழம்பு என்று அழைக்கப்படுகிறது.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்"** (குறுந்: 167:1-4)

விரால் மீன் குழம்பிற்கு மாவின் தீங்கனி புளியாகப் பயன்படுத்தி உணவு சமைத்ததை கீழக்கண்ட அடிகள் கூறுகிறது. அவை

**"ஓங்குதினை மாவின் தீங்கனி நறும்புளி**
**மோட்டிரு வரால் கோட்டு மீன் கொழுங்குறை"** (புறம் : 399)

சங்க காலத்தில் பெண்கள் உணவு சமைப்பதில் வள்ளவர்களாகத் திகழ்ந்ததை சங்க இலக்கிய பாடல் நமக்குப் புலப்படுத்துகிறது.

**வீரம்**

கரிகாலனின் வீரம் பற்றி பொருநராற்றுப்படை நூல் விளக்குகிறது. அவை

**"இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய**
**வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்**
**கண்ஆர் கண்ணி கரிகால் வளவன்"** (பொருந : 146-147)

கரிகாலன் பால்குடி மறவாத காலத்திலேயே மிகுந்த வலிமையோடு முதல் வேட்டையாக வெண்ணிப் பறந்தலை என்ற இடத்தில் பனம்பூவைச் சூடிய சேரனையும், வேப்பமாலையை அணிந்த பாண்டியனையும் ஒரே நேரத்தில் வென்று வாகை சூடினான். வெற்றிமிக்க வேலினையும் அழகான குதிரைகளையும் உடைய இளஞ்சேட்சென்னியின் புதல்வனாகிய கரிகாற்சோழன் முருகனது சீற்றத்தோடு ஒப்பிட்டு பேசும் அளவிற்கு வீரம் மிகுந்தவன்.

**நடுகல் வழிபாடு**

பகைவரோடு போரிட்டு வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு அவர்களுடைய பெயரும் பீடும் எழுதி நடுகல் நட்டதற்கான சான்றாதாரங்கள் சங்க இலக்கிய நூல்களில் காணப்படுகிறது. அவை

**"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்"** (தொல். பொ. 63)

என்று நடுகல் நடும் பழக்கத்தின் பல்வேறு நிலைகளைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

**"ஒன்னார்த் தெல்வர் உலைவிடத்து ஆர்தென**
**செல்லா நல்இசைப் பெயரோடு நட்டகல்"** (மதுரைக் : 386)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. சங்க காலத்தில் உருவான நடுகல் வழிபாடு தற்காலத்தில் சிறு தெய்வங்களாக வழிபடுபவதை நாம் காண்கிறோம்.

**கலை**

ஆடல், பாடல் கலைகளை அக்காலத்து அரசா்கள் போற்றி, கலை நிகழ்த்துவதற்குத் தேவையான பொருட்களைக் கொடுத்து கலைப் பண்பாட்டினை வளா்த்தனா். இக்கலை நிகழ்த்துவோா்க்கு ஊா்கள், யானைகள், குதிரைகள், பயிா் செய்யும் விளை நிலங்கள் தானமாக வழங்கியதைப் பற்றி கபிலா் பாடியுள்ளாா். அவை

**"விரை ஒலி கூந்தல் நும் விறலியா் பின்வர**
**ஆடினீா் பாடினீா் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்கே ஈயும்மே"** (புறம் : 109)

அரசா்கள் விலைமதிக்க முடியாத பொருள்களைக் கொடுத்து கலைப்பண்பாட்டை வளா்த்ததை சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் நாம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்கள் காதலையும், வீரத்தையும் தம் இரு கண்களாகக் கருதினா். புத்துணா்வும், புதுவாழ்வும் பெறத் துடிதுடிக்கும் தமிழ் மக்களுக்கு சங்க இலக்கிய நூல்கள் ஓா் ஒப்பற்ற அறிவுச் சுரங்கம். சங்ககால மக்கள் வாழ்வில் கடைபிடித்த அறம் உணவு, உடை, கொடைப்பண்பு, மருத்துவ அறிவு, திருமணமுறை, விருந்தோம்பல் பண்பு, நடுநிலைப் பண்பு, கலை, வீரம், நடுக்கல் வழிபாடு ஆகிய விழுமியங்கள் பற்றிய செய்திகளை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

# முல்லைப்பாட்டும் வாழ்வியல் சிறப்புகளும்

*மா.நஜ்மூன், பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, இஸ்லாமியா கல்லூரி (தன்னாட்சி), வாணியம்பாடி.

**முன்னுரை**

செவ்விலக்கியத் தரம் வாய்ந்த பத்துப்பாட்டு இலக்கியங்களுள் ஐந்தாவதாக எண்ணப்படும் சிறப்பு வாய்ந்தது முல்லைப்பாட்டாகும். இம்முல்லைப்பாட்டு அளவில் சிறியதாயினும் பேரளவிலான சிறப்புகளைத் தனக்குள்ளே கொண்டு திகழ்கிறது. பத்துப்பாட்டுள் மிகச்சிறிய இலக்கியம் என்னும் சிறப்பைப் பெற்ற நூல் முல்லைப்பாட்டாகும். இந்நூல் அக இலக்கியமாகும். இதன் அடிவரையறை 103 ஆசிரியப்பாவால் ஆனது. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகன் மகன் நப்பூதனார் இயற்றியுள்ளார். பாட்டுடைத் தலைவனாகிய அரசனின் பெயர் குறிப்பிடாமல் 'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்' என்னும் அகமரபிற்கேற்ப அமைந்துள்ளது. தலைவி தன் நெஞ்சை ஆற்றுப்படுத்துவதாக அமைவதால் 'நெஞ்சாற்றுப்படை' எனவும் அழைக்கப்பெறும். இக்கட்டுரையின் வாயிலாக முல்லைப்பாட்டின் சிறப்புகளையும் அறிய முடிகிறது.

**முல்லைப்பாட்டின் திணைகள்**

முல்லைப்பாட்டு முல்லைத்திணையைக் கொண்டது. முல்லைத்திணையின் பொழுதுகள் கார்காலம் என்னும் பெரும்பொழுதும், மாலை என்னும் சிறுபொழுதும் ஆகும்.

**"கோடு கொண்டெழுந்த கொடுஞ்செலவு எழிலி**

**பெரும்பெயன் பொழிந்த சிறுபுன் மாலை"**

இப்பாடல் வரிகள் கார்காலத்தையும், மாலைப்பொழுதையும் குறித்து நிற்பனவாகும். முதல், கரு, உரிப்பொருள் என்னும் முப்பொருளும் சிறந்திருக்கும் நூல். முல்லைப்பாட்டு அகநூலாயினும், தலைவியின் பிரிவுத்துயருக்குக் காரணமான தலைவனின் போர்ப்பாசறை புறப்பொருள் செய்தியாக அமைந்துள்ளது. முல்லை என்னும் அகத்திணைக்கு எதிரான புறத்திணை வஞ்சி. 'வஞ்சிதானே முல்லையது புறனே' என்கிறது தொல்காப்பியம். முல்லைத்திணை தலைவியை முன்னிறுத்தியும்; வஞ்சித்திணை, தலைவனை முன்னிறுத்தியும் வஞ்சித்திணைக்குரிய 'வேனிற் பாசறை' முல்லைப்பாட்டில் கூறுவதையும் காண முடிகிறது.

முல்லைப்பாட்டு ஒரு பண்பாட்டுச் சுரங்கம்; வாழ்வியல் பெட்டகம்; தமிழர்தம் வாழ்க்கையைக் காட்டும் ஓவியம்; உலகளாவிய அளவில் தமிழரின் பெருமையை உணர்த்தும் ஒப்பற்ற இலக்கியம். அகப்பொருள் மரபு சார்ந்த இந்நூல் தலைவி பிரிவை ஆற்றியிருத்தலையும் தலைவன் வினைமுடித்துத் திரும்பி வருதலையும் தலைவன் வினைமுடித்துத் திரும்பி வருதலையும் உட்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது.

**கார்ப்பருவத்தின் வருகை**

**"வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**

**நீர்செல நிமிர்ந்த மாஅல் போல"**

குளிர்ந்த கடல்நீரை முகந்த மேகம், இவ்வுலகை வளைத்து, வலமாக உயர்ந்து எழுந்து மலைகளில் தங்கி புல்லிய மாலைப்பொழுதில் பெருமழை பொழிந்தது. வலம்புரிச் சங்கும் சக்கரமும் கொண்ட திருமால், வாமன அவதாரத்தின்போது, மாவலி வார்த்த நீர் கையில் பட்டதும், விண்ணையும் மண்ணையும் அளக்கும்படி உயர்ந்தது.

**மகளிர் தெய்வத்தை வழிபடல்**

**" நாழி கொண்ட நறுவீ முல்லை**

**அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது**

**பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"**

இப்பாடலின் வாயிலாக மாலைப் பொழுதில், பெருமுது பெண்டிர், ஊரின் புறத்தே சென்று அரும்புகள் மலரும் முல்லைப் பூக்களை நாழியில் கொண்ட நெல்லோடு தூவி தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்டு நின்றனர் என்று கூறியுள்ளார் ஆசிரியர்.

**பெருது பெண்டிர் விரிச்சி கேட்டுத் தலைவியைத் தேற்றுதல்**

விரிச்சி கேட்ட மகளிர், தலைவியிடம் வந்து, தலைவியே! கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்றுகள் பசியால் வருந்துவதைப் பார்த்த இடையர் பெண் ஒருத்தி, அக்கன்றுகளை நோக்கி, "கோவலர் பின்னின்று செலுத்த, உம் தாய்மார் வந்துவிடுவர்" என்று கூறிய நல்ல சொற்களை நாங்கள் கேட்டோம். போரின் பொருட்டுப் பிரிந்து சென்ற நின் தலைவன் பகைவரை வென்று, திறைப் பொருளுடன் விரைந்து வருவான் என்று ஆறுதல் கூறியும் தேறாதவளாய், கண்ணீர் பெருக்கி, தலைவி வருந்தி இருந்தாள்.

**பாசறை அமைவிடம்**

காட்டாறு சூழ்ந்த அகன்ற காட்டின்கண் பிடவஞ் செடிகளையும் புதர்களையும் வெட்டி, வேடரின் அரண்களை அழித்து, முள் வேலியிட்டு, கடல் போன்ற பரப்புடன் பாசறை அமைக்கப்பட்டது.

**யானைப் பாகரது செயல்**

**" ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்து யாத்த**

**வயல்விளை இன்குளகு உண்ணாது நுதல்துடைத்து**

**அயில்நுனை மருப்பின்தம் கையிடை கொண்டென"**

பாசறையின் நாற்சந்தி முற்றத்தில், கரும்புகளையும், நெற்கதிர்களையும் அதிமதுரத் தழைகளையும் உண்ணாமல், தம் தந்தங்களின் தும்பிக்கையைச் சாய்த்து நிற்கும் யானைகளை கல்லாத இளைஞர்கள் பரிக்கோலால் குத்தி, யானைகளைப் பயிற்றுவிக்கும் வடமொழிகளைக் கூறி, உண்ணும்படி வேண்டினர்.

**வீரர்களின் படைவீடுகள்**

முக்கோல் அந்தணர், முக்கோலை நட்டு, இதன் மீது தம் காவியுடையை இட்டு வைத்த தன்மையை பாசறையின்கண் வலியவில்லை ஒரு சேர ஊன்றி, அவற்றின்மேல் அம்புக்கூடுகளைத் தொங்கவிட்டு, கூடாரமாகக் கால்களை நட்டு, கயிற்றால் வலித்துக் கட்டிய இருப்பிடத்தில் வேல்களை நட்டும், கிடுகு எனப்படும் கேடயங்களை வரிசையாகப் பிணித்தும் வீரர்கள் வைத்தனர். இவ்வாறு வீரர்களின் படைவீடுகள் அமைந்திருந்தன.

**அரசனின் பாசறை**

**" வேறுபல் பெரும்படை நாப்பண், வேறு ஓர்**

**நெடுங்காழ்க் கண்டம் கோலி, அகம் நேர்பு"**

படைவீரர்களின் இருக்கைக்கு நடுவே, வேறு ஒரு தனியிடத்தில் நெடிய குத்துக்கால்களுடன் சேர்த்து, பல வண்ணத் திரைச்சீலைகளை வளைத்துக் கட்டி அரசனுக்குத் தனியாக ஓர் உள்வீட்டை வீரர்கள் அமைத்துக் கொடுத்தனர்.

**மங்கையர் விளக்குகளை ஏற்றுதல்**

அரசனின் பாசறையில் வளையணிந்த முன் கையினையும் கூந்தல் அசையும் முதுகினையும், வலிய பிடியமைந்த வாளினைச் சேர்த்துக் கட்டிய கச்சினையும் உடைய மகளிர், பாவை விளக்கில் நீண்ட திரியை இட்டு, நெய் வார்க்கும் குழாயால் நெய்வார்த்து விளக்கேற்றினர்.

**மெய்க்காப்பாளர் காவல்**

மோசி மல்லிகைப் பூக்கள் பூத்த சிறுசெடிகள் மழைக்காற்றில் அசைந்தாடுவதை தலைப்பாகை கட்டிய, சட்டையணிந்த வயது முதிர்ந்த மெய்க்காப்பாளர் தூக்க மயக்கத்தில் ஆடி அசைந்து மன்னனைச் சூழ்ந்து காவலாக நின்றனர்.

**நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தல்**

**“ எறி நீர் வையகம் வெரீஇய செல்வோய்! நின்**

**குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப”**

பொழுது அளந்து அறிவித்தலைப் பொய்க்காமல் சொல்லவல்ல நாழிகைக் கணக்கர்கள், “கடல் சூழ்ந்த இவ்வுலகில் பகைவரை வெல்லச் செல்கின்ற அரசனே! உம்முடைய நாழிகை வட்டிலில் சென்ற நாழிகை இவ்வளவு! காண்பாயாக!” என்று மன்னனுக்கு அறிவித்தனர்.

**வண்கண் யவனர்**

அரசனின் பாசறை, திரை இழுக்கப்பட்டு இரு அறைகளுடன் புலிச்சங்கிலியால் ஒப்பனை செய்யப்பட்டிருந்தது. இடுப்பின்கீழ் மறையும்படி மடங்கிப் புடைத்துத் தோன்றும். சட்டையை அணிந்தும், அச்சட்டையின் மீது குதிரைச் சவுக்கு வளைந்து கிடக்கவும், அச்சம் தரும் தோற்றமும் வலிய உடலையும் உடைய யவனர் அரசனின் பாசறை அரண் அமைத்தோராவார்.

**மிலேச்சர்**

**“ உடம்பின் வரைக்கும் உரையா நாவின்**

**படம் புகு மிலேச்சர் உழையர் ஆக”**

யவனர்களால் அமைக்கப்பட்ட அவ்வரசனின் உள் அறையாகிய பள்ளியறையில் அரசன் இருக்க, அவ்வறையை வாய்பேச முடியாத சட்டையணிந்த ஊமை மிலேச்சர்கள் பாதுகாத்து நின்றனர்.

**வேந்தன் மனநிலை**

மன்னன் பள்ளியறையில் ஒரு கையைப் படுக்கையின்மேல் வைத்தும், கடகம் அணிந்த மற்றொரு கையால் தலையைத் தாங்கியும் உறக்கமின்றி போரினை நினைத்தவனாய் விழித்திருக்கின்றான். பகைவர் எறிந்த வேல் பட்டமையால் புண்பட்டு, பெண்யானைகளை மறந்த களிறுகளையும், பகைவரது யானைகளின் துதிக்கையினை வெட்டி வீழ்த்தி, செஞ்சோற்றுக் கடன் தீர்த்து போரிலே வீரமரணம் அடைந்த வீரர்களையும், பாதுகாப்புக்காக அணியப்பட்ட தோற்பரிசையை அறுத்து பகைவரின் அம்பு பாய்ந்ததால் புண்பட்டு, செவி சாய்த்துப் புல் உண்ணாமல் வருந்தும் குதிரைகளையும் நினைத்தவனாய் மன்னன் உறக்கமின்றி இருக்கின்றான்.

**பாசறையில் வெற்றி முழக்கம்**

**" அரசு இருந்து பணிக்கும் முரசு முழங்கு பாசறை**

**இன்துயில் வதியுநன்"**

போரில் பகைவரை வென்று தன் வஞ்சிமாலைக்கு வெற்றியைத் தேடித் தந்தமையால் பகை மன்னர் நடுங்கும்படி பாசறையில் வெற்றி முரசு முழங்க, வினை முடிந்த செம்மையில் இனிதாகத் துயில் கொண்டான் மன்னன்.

**அரசன் வெற்றியுடன் திரும்புதல்**

பகைவரை வென்று அவர்தம் நாடுகளைக் கவர்ந்த திரண்ட படையோடு வெற்றிக்கொடி உயர்த்தி சங்கும் ஆரவாரிக்கத் திரும்புகிறான் தலைவன். தலைவன் திரும்பிவரும் கார்க்காலத்தில் வழியெங்கும் மைபோல காயா மலர் பூத்திருக்கின்றன: வெண்காந்தள் மலர்கள் அழகிய கைபோல விரிந்திருக்கின்றன. நன்கு விளைந்த கதிர்களை உடைய வரகினிடத்தே முறுக்கின கொம்புகளை உடைய இரலைமான்கள் பெண்மான்களுடன் துள்ளி விளையாடுகின்றன.

**" முதிர்காய் வள்ளியம் காடு பிறக்கு ஒழிய**

**துனைபரி துரக்கும் செலவினர்**

**வினை விளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே"**

குதிரையை விரைந்து செல்லும்படி தூண்டிச் செலுத்தி வருகின்றான். தலைவனின் நீண்ட தேரில் பூட்டிய குதிரைகள் அரண்மனையில் இனிய ஓசைகளைக் கேட்டவண்ணம் ஆற்றியிருக்கும் தலைவியின் செவிகள் குளிரும்படி ஆரவாரித்தன.

**பழந்தமிழர் வாழ்வியல் நிலை**

முல்லைப்பாட்டு பழந்தமிழர் வாழ்வியல் செய்திகளை அறிவிக்கும் வாழ்வியல் களஞ்சியம் மாலைப்பொழுதில் பெண்கள் நெல்லும் மலரும் தூவி தெய்வத்தை வழிபடுதலும், விரிச்சி கேட்டலும் வடமொழி பேசும் யானைப்பாகர் பற்றிய குறிப்புகளும் நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தலும் செஞ்சோற்றுக் கடன்தீர்க்க வீரர்கள் போரில் விழுப்புண்பட்டு இறத்தலும் பகையரசர் திறைப்பொருள் கொடுத்தலும் முல்லைப்பாட்டு களஞ்சியமாகத் திகழ்கிறது.

**முடிவுரை**

முல்லை அகவொழுக்கத்திற்கு இயைபுடைய புறவொழுக்கம் வஞ்சியாகும். ஓர் அரசன் பகையரசர் நாட்டினை கைப்பற்றப் படையெடுத்தல் வஞ்சியாகும். தலைவனைப் பிரிந்த தலைவியின் இயல்பு, பாசறை அமைப்பு, பாசறை நிகழ்வுகள், போரில் நேரக்கூடியவை, தலைவனுடைய வீரம், மனநிலை கார்காலத்து இயற்கை பண்டைக் காலத்து முல்லை நிலச் செய்திகள் பலவும் முல்லைப்பாட்டில் விரிந்து கிடக்கின்றன. "மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும், சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்" எனத் தொல்காப்பியம் அகப்பொருள் மரபைக் குறித்து விளக்குகிறது. அகப்பொருள் மரபிக்கேற்க முல்லைப்பாட்டு அமைந்திருக்கிறது.

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

***வி.கார்த்திகாயினி,** முனைவர் பட்ட ஆய்வாளர், யாதவர் கல்லூரி, மதுரை-14.

தமிழ் இலக்கியங்கள் மக்கள் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றன. அவை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கை முறை, வாணிபம், பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றை எடுத்துக்காட்டி நிற்கின்றன. வாழ்க்கையின் வழிகாட்டிகளாகத் திகழ்கின்ற இலக்கியங்களில் நுழையுங்கால் நம் உணர்வுக்கு விருந்தும், உள்ளத்திற்கு அமைதியும் தருகின்றன.

இலக்கியத்தினை வாழ்க்கையின் உரைகல் என்று அறிஞர் குறிப்பிடுவர். மொழியின் வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே இலக்கியம். அம்முறையில் தனக்கென ஒரு விழுமிய வரலாறும், வாழ்க்கை நெறியும் படைத்த தமிழினம் பழமையும், சிறப்பும் கொண்டு விளங்குகிறது. இவ்விலக்கியம் ஒரு வரையறைக்குட்பட்ட கற்பனை, சிறந்த உணர்ச்சி, விழுமிய கருத்து. மனத்தைக் கொள்ளை கொள்ளும் வடிவம். அளவான ஓசை இவற்றினைச் சங்க இலக்கியத்தில் காண முடிகிறது. இதனால் தான் அன்று முதல் இன்று வரை இந்நூலுக்கு முன்னோடி வேறெதுவுமில்லை என்று கூறலாம்.

**தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்**

மனிதன் வாழ்ந்த, வாழ்கின்ற வாழ்க்கையை எடுத்துரைப்பது வாழ்வியலாகும். இவ்வாழ்வியல் சமூக இயலின் அங்கமான அரசியல், தனிமனித இயல்பு பொருளாதாரம், சமயம், பண்பாடு, குடும்பம், திருமணம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது. இவ்வாழ்வியல் மனிதனைச் சமூகத்துடன் இணைக்கின்ற பாலமாகும்.

**வாழ்வியல்**

வாழ்வியல் என்ற சொல்லுக்கான பொருளை ஆராயமுற்படும் போது, வாழ்வியல் என்பதனை,

**"வாழ்வியல் - வாழ்வு + இயல் என்று பிரித்து வாழ்வு – முறைமை, வாழ்தல் என்றும், இயல் - ஒழுங்கு என வாழ்வியல் விளக்கத்தினை தமிழ்மொழி அகராதி எடுத்தியம்புகின்றது"**

வாழ்வியல் என்ற சொல்லுக்கு முறையாக வாழ்தல் என்று விளக்கம் தரப்படுகிறது.

**இயற்கையோடு இயைந்த வாழ்வு**

சங்க கால மக்கள் தங்களுக்குப் பிடித்தமான நிலத்தைத் தேர்ந்தேடுத்து வாழத் தலைப்பட்டனர், வாழிடம் காடாக, மலையாக, கடற்கரையாக, வயல்சூழ்ப் பகுதியாக இருந்தது. அவற்றை நாகரிகத்திற்கு ஏற்றார் போல் மாற்றி அமைத்தனர். ஆனால் இயற்கையை அழிக்கவில்லை, புவி என்பது நிலம், நீர், தீ. காற்று, வானம் எனபதை அக்கால மக்கள் உணர்ந்திருந்தனர்.

**"மண்டிணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**

வளித்தலை இய தீயும்

தீமுரணிய நீரு மென்றாங்கு

ஐம்பெரு பூதத்து இயற்கைபோல”                    (புறம் 2 : 1-6)

என்று கூறுவதன் மூலம் அவர்களின் உலகம் பற்றிய பரந்த அறிவு புலனாகிறது. அக்கால மக்கள் தொழில் நுட்பத்தோடும், அழகியல் உணர்வோடும் வாழ்ந்தனர். அவர்களின் வாழ்வியல் முறை இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. நிலம், பொழுது. தட்ப வெப்பத்திற்கு ஏற்றவாறு வாழ்வியல் முறையை அமைத்துக் கொண்டனர்.

**பண்பாடு**

சங்ககால மக்களின் வாழ்க்கை இயற்கை அமைப்பினை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய சங்ககாலத்தில் தமிழர்களுக்கென்று தனித்தன்மை மிக்க பண்பாடு இருந்ததை,

“தமிழன் என்றொரு இனமுண்டு

தனியே அவர்க்கொரு குணமுண்டு”   (நாமக்கல் கவிஞர் பாடல்கள் -19)

என்ற நாமக்கல் கவிஞரின் பாடல் தமிழனின் தனிச்சிறப்பையும், உயர்ந்த பெருமையையும் உணர்த்துகிறது. அன்பு, பாசம், நேசம், ஈரம், வீரம், கொடை போன்ற உயரிய பண்புகளைக் கொண்டு தன் இல்லறக் கடமைகளை இனிதே நிறைவேற்றி வாழ்பவன். பார் புகழும் விதத்தில் பண்பாடுகளைப் பெற்றுப் பலரும் வியக்கும் வண்ணம் வாழ்ந்துகாட்டி என்றும் பெருமை கொள்பவன் தமிழன். பண்பாட்டு சிறப்புடையவன் என்கிறார்.

**நாகரிகம்**

உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களில் ஒன்று தமிழ் நாகரிகம். பண்டைய தமிழத்தில் இயற்கையை எதிர்த்து வாழத் தொடங்கிய மனிதனின் வாழ்வில் ஒரு சிறந்த நாகரிகம் தோன்ற பல நூற்றாண்டுகள் தேவைப்பட்டன. மனிதன் கடந்து வந்த நாகரிகத்தின் படிக்கட்டுக்கள் வேட்டையாடல், நாடோடி வாழ்க்கை, கால்நடை மேய்த்தல், இவை கலந்து இருக்கும் நிலத்தைச் சார்ந்த இயற்கை வளங்களின் இயல்புகள் நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

**கல்வி**

சங்க காலத்தில் கல்வியில் சிறந்த சான்றோர்கள் இருந்திருந்தனர் என்பதை அறிவதற்குச் சிறந்த ஆதாரமாகத் திகழ்வது சங்ககால இலக்கியங்களே ஆகும். கல்வியில் சிறந்த புலவர்கள் இல்லை என்றால் இன்று சங்க கால மக்களின் வாழ்வியல் முறைகளைப் பற்றி நம்மால் அறிந்திருக்க முடியாது. ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் கல்வியில் சிறந்து விளங்கினர். குலத்தொழில்கள் செய்து வந்தாலும் கிடைக்கும் நேரங்களில் கல்வி கற்றனர். திண்ணைப் பள்ளி, குருகுலப் பள்ளி போன்றவைகளில் சங்ககால மக்கள் கல்வி கற்றனர். அந்நாளில் எழுதுவதற்கு ஓலைச் சுவடிகளைப் பயன்படுத்தினார்கள். கல்வியில் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள் இருந்ததை,

“பல்கேள்வித் துறை போகிய

தொல் ஆணை நல்லாசிரியர்”              (பட்டினப்பாலை 169-170)

என்று பட்டினப் பாலை பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**தொழில்கள்**

சங்க கால மக்கள் நிலத்தை நான்கு வகையாகப் பாகுபாடு செய்தனர். இவற்றில் மலைப்பகுதியைச் சார்ந்த குறிஞ்சி நிலமக்கள் தினை விதைத்தல், வேட்டையாடுதலை

முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். முல்லை நிலத்து மக்கள் ஆடு, மாடு மேய்த்தல், புன்செய்ப் பயிர் செய்தனர். மருத நிலத்து மக்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டனர். நெய்தல் நில மக்கள் தொழில் மீன்பிடித்தலும், உப்பு விளைவித்தலுமாகும். இவர்களைத் தவிரச் சமூகத்தின் நல்வாழ்வுக்கு உதவும் தொழில்களைச் செய்த பல்வேறு தொழில் பிரிவினரும் இருந்துள்ளனர்.

**வாணிபம்**

ஒரு பொருளை உற்பத்தி செய்து தேவையானவற்றை வைத்துக்கொண்டு உபரியாக உள்ள பொருள்களை விற்பனை செய்வது வாணிபம், அதனை வியாபாரம் என்றும் அழைப்பர்.

**“ வாணிகம் செய்வோர்க்கு வாணிகம் பேணிப்**

**பிறவும் தம்போற் செயின்” ( குறள் :120)**

என்று வள்ளுவர் கூறியுள்ளார். பண்டைக்காலம் முதல் தமிழ்நாடு வாணிபத்தில் சிறந்து விளங்குகியது. தம்மிடம் உள்ள பொருளை அல்லது நாணயத்தைக் கொடுத்து தம்மிடம் இல்லாத பொருளைப் பெறுவது வாணிபம் எனப்படும். ஒவ்வொரு நிலத்திற்கேற்பத் தொழில்கள் வேறுபடும், தொழில் வேறுபாடுகளுக்கு ஏற்ப வாணிகமும் வேறுபடும். தம் நிலத்தில் கிடைத்த பொருளை வேற்று நிலத்திற்குக் கொண்டு சென்று விற்று மற்றொரு பொருளைப் பெற்றுள்ளனர். ஆகவே வாணிபத்தின் பொருட்டு ஒரு நிலத்து மக்கள் மற்றொரு நிலத்திற்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உழவு, வாணிகம் ஆகிய இரு தொழில்கள் இன்றியமையாதவை என்பது பழந்தமிழர் கண்ட உண்மையாகும். சங்க காலத்தில் வாழ்ந்த மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சியில்,

**“வியன் மேவன் வழுச் செல்வத்து**

**இரு வகையான் இசை சான்ற**

**சிறு குடிப்பெருந் தொழுவர்**

**குடி கெழிஇய நானில வரோடு” (மதுரை 120 - 123)**

என்று குறிப்பிடுகிறார். உலகத் தொழில்களுக்கெல்லாம் சிறந்த தொழில் இரண்டு. அவை உழவும், வாணிகமும் ஆகும். இவற்றால் வாணிபம் என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம், பண்பாட்டு நிலைகளை வெளிப்படுத்தும் கருவியாகும் என்பது புலனாகும்.

**உணவு**

மக்களின் பண்பாட்டை உணர அவர்தம் உணவுப் பழக்கவழக்கங்கள் காரணமாக அமைகின்றன. உணவு என்பது மக்களின் பருவச்சூழ்நிலை, வாழும் நிலத்தின் தன்மை, விளையும் பொருள்கள், சமூகப் படிநிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. சங்க கால மக்கள் இயற்கையாகக் கிடைத்த தாவரங்களையும், உயிரினங்களையும் உணவாகப் பயன்படுத்தினர். அவர்களின் உணவு வகைகள் உடல் நலத்திற்கு ஏற்றவையாக இருந்தன. மா, பலா, வாழை,அவரை,துவரை, தேன், தினை மாவு என்று இயற்கை உணவை உண்டனர்.

உணவினைச் சுவையுறச் சமைப்பதிலும், உண்பதிலும் அம்மக்கள் சிறந்து விளங்கினர். சமைத்தல் என்பது ‘பக்குவப்படுத்துதல்’ என்று பொருள்படுகிறது. சமைப்பது ‘அடுதல்’ எனப்படும், சமையல் செய்யப்படும் இடம் ‘அட்டில் அல்லது அடுக்களை’ என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் அக்காலத்தில் உணவினை நீரிட்டு அவித்தல், வறுத்தல், சுடுதல், வற்றலாக்குதல், எண்ணெயிலிட்டுப் பொரித்தல், ஊறவைத்தல் போன்ற முறைகளைப்

பின்பற்றினர். அவர்கள் வாழும் நிலத்தின் தன்மையைப் பொறுத்து உணவுமுறைகள் மாறுபட்டன.

**விருந்தோம்பல்**

சங்க கால மக்கள் ஈதலையும், விருந்தோம்பலையும் இரு கண்களாகக் கருதி, அவற்றை வாழ்வியல் அறமாக எண்ணி வாழ்ந்து வந்தனர். வீட்டிற்கு வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்றனர். 'விருந்து' என்பதற்கு புதுமை என்று விளக்கம் அளிக்கிறார் தொல்காப்பியர். முன்பின் அறியாத புதியோர்க்கு எளிய உணவாக இருந்தாலும், அதனை பகிர்ந்தளித்து உண்ணும் குணமுடையவர்களாக சங்கத் தமிழர்கள் இருந்து வந்தனர்.

விருந்தினர் உண்ட பின் எஞ்சிய உணவையே மகிழ்வுடன் உண்டனர் என்பதை,

**"விருந்து உண்டு எஞ்சிய மிச்சல் பெருந்தகை**

**நின்னோடு உண்டாலும் புரைவது"** **(குறிஞ்சிப்பாட்டு : 206 - 207)**

என்னும் பாடல் அடிகள் வாயிலாக அறியமுடிகிறது.

**இல்லறம்**

இல்லறம் என்பது மனித வாழ்வின் தொடக்க நிலையாக உள்ளது. இதனை ஔவையார் 'இல்லறமல்லது நல்லறமல்லது' என்று இல்வாழ்கையினைச் சிறப்பித்து கூறியுள்ளார். எச்செயலைச் செய்தாலும் அன்போடும், அறத்தோடும் செய்வது இல்வாழ்க்கையில் பயனை விளைவிக்கும் என்பதை,

**"அன்பும் அறமும் உடைத்துஆயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது"** **(குறள்: 45)**

என்கிறார் வள்ளுவர். தொல்காப்பியத்தில் 'கற்பு என்று வரும் இடங்கள் எல்லாம் ஆராயின் அது இல்லறம் என்னும் பொருளையே குறிக்கின்றது' அத்தகைய இல்லறத்தில் பெண்கள் இல்வாழ்க்கையின் கடமைகளிலும், பண்புநலன்களிலும் சிறந்து விளங்கினர். வறுமை நிலையிலும் வருந்தாமல் ஒரு மணப்பட்டு வாழ்பவரின் இல்லறம் உயர்ந்ததாகக் கருதப்பட்டது.

**முடிவுரை**

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் என்ற உயர்ந்த சிந்தனைகளோடு வாழ்ந்த நம் சங்கப் புலவர்களின் பொய்புகலாச் செந்நாவில் உதித்தவை சங்கப் பாடல்கள். அத்தகைய மண்வளம், சிந்தனை வளம் செறிந்த பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள் பொதித்து உள்ளமையை அறிய முடிகிறது.